கல்யாண முகூர்த்தப் புடைவைகளின்
கைராசியான முன்னணி நிறுவனம்
திருமாட்டி புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கையர், ஆடவர் மனதைக் கொள்ளை கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு, பருத்தி புடைவைக் கடல்
திருமாட்டி புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 29 புதன்கிழமை (12 - 04 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 136

# கொழும்பில் இருந்து பதில் வராத நிலையில்
# அரசுத் தரப்புப் பிரதிநிதிகள் மூவரும் திரும்பினர்!

## ஐ. தே. க. பொதுக் கூட்டம் கலவரத்தில் முடிந்தது!

### வலப்பனையில் ஞாயிறு சம்பவம்

கொழும்பு, ஏப் 12
கடந்த ஞாயிறன்று வலப்பனை நில்தண்டாஹேனவில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுக் கூட்டம் ஒன்று பெரும் கலவரத்தில் முடிவுற்றது.

பொதுக் கூட்டத்திற்குள் திடீரென குண்டர் கோஷ்டி ஒன்று புகுந்ததை அடுத்து. துப்பாக்கிப் பிரயோகம் கல்வீச்சு என அப்பிரதேசம் யுத்தக் களமாகியது நிலைமை உக்கிரமடைந்த போது பொலீஸார் தலையிட்டு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்தனர்.

கூட்டத்தில் கலந்துகொள்ள வந்திருந்த முன்னாள் சுகாதார அமைச்சரும் நுவரேலியா மாவட்ட எம். பியுமான ரேணுகா ஹேரத், எம். பியான டாக்டர் ராஜித சேனரத்ன ஆகியோர் பொலீஸாரினால் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

ஆளும்கட்சி அரசியல்வாதி ஒருவரின் ஏற்பாட்டில் சில தினங்களுக்கு முன்னரே இக் கூட்டத்தைக் குழப்புவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டது. என்றும்

இச்சம்பவத்தில் ஐ தே க ஆதரவாளர்கள் மூவர் படுகாயமுற்றதாகவும்—

ராஜித சேனரத்ன பொலீஸ் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (உ-6)

## கடற்படையின் ரோந்து வடக்குக் கடலில் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 12
வடபகுதிக் கடற்பரப்பில் கடற்படையினரின் ரோந்து அதிகரிக்கப்பட்டுள்ளதாக கொழும்புத் தமிழ் தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்தவாரம் இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்து மீறிப் பிரவேசித்த நான்கு இந்திய இழுவைப் படகுகளை கடற்புலிகள் கைப்பற்றியதாகவும்—

கைப்பற்றப்பட்ட ஓர் இழுவைப் படகுடன் பத்தொன்பது மீனவர் பின்னர் விடுவிக்கப்பட்டதாகவும்—

அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடற்புலிகளால் விடுதலை செய்யப்பட்ட மீனவரை இலங்கைக் கடற்படையினர் இடைமறித்து காங்கேசன்துறைக்கு கொண்டு சென்றதாகவும்—

இதன்பின்பே ரோந்துப் பணிகள் அதிகரிக்கப்பட்டதாகவும் அப்பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-7)

## தமிழக ஆளுநரின் கார் மீது அ.தி.மு. கவினர் தாக்குதல்

### சென்னாரெட்டி அருந்தப்பு

சென்னை, ஏப் 12
தமிழக ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டி சென்று கொண்டிருந்த கார் நேற்று முன்தினம் சென்னைக்குத் தெற்கே திண்டிவனத்தில் வைத்து அனைத்திந்திய அ. தி. மு. க தொண்டர்களினால் தாக்கப்பட்டது.

சென்னையிலிருந்து பாண்டிச்சேரிக்கு ஆளுநர் சென்று கொண்டிருந்த சமயம் வீதியைத் தடைசெய்த அ. தி. மு. க. ஆதரவாளர்கள் கற்களையும், அழுகிய முட்டைகள், தக்காளி ஆகியவற்றையும் கொண்டு ஆளுநரின் காரைத் தாக்கினார்கள். எனினும் அவர் காயம் எதுவுமின்றித் தப்பினார்.

ஆளுநர் மீண்டும் சென்னை திரும்பும் போது இவ்வாறான தாக்குதலை நடத்தவென்று கறுப்புக் கொடிகளுடன் காத்துநின்ற அ. தி. மு. கவினரை பொலீஸார் விரட்டினர்.

ஆளுநர் வரும் பாதையை மாற்றி அமைக்கவேண்டிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முடிவு எதுவும் எட்டப்படாமலேயே நான்காம் கட்டப் பேச்சு முடிவு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 12
அரசுப் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பேச்சுக்களைத் தொடர்ந்து நேற்று கொழும்பிலிருந்து கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்ட பதில் கிடைக்கவில்லை. இதனையடுத்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த — அரசுத் தரப்பின் எஞ்சிய பிரதிநிதிகள் மூவரும்— நேற்று பிற்பகல் கொழும்புக்குப் புறப்பட்டனர்.

புதிய முடிவு எதுவும் எட்டப்படாத நிலையில் — பயனற்றதாக — நான்காம் கட்டப் பேச்சுக்கள் முடிவடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் நடந்த நான்காம் கட்டப் பேச்சுக்களின் முடிவில் —

அரச தரப்புக்குழுத் தலைவரான ஜனாதிபதியின் செயலாளர் குசும்சிறி பாலபட்டபெண்டி, பேச்சுக்களில் தெரிவிக்கப்பட்ட சில விடயங்கள் குறித்து ஜனாதிபதியுடன் பேசி அது பற்றிய விளக்கத்தை இன்று காலை 9 மணிக்கு அரசகுழுவுக்கு அனுப்புவதாகவும் -

இங்கு தங்கியுள்ள — அரச குழுவின் எஞ்சிய பிரதிநிதிகள் — அது குறித்து விடுதலைப்புலிகளுடன் தொடர்ந்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளுடனான பேச்சுக்களின் பெறுபேறுகள் குறித்து

## நீண்ட நேரம் ஜனாதிபதியுடன் 3 அரசுப் பிரதிநிதிகளும் ஆலோசனை

### சிரேஷ்ட அமைச்சர்கள், அதிகாரிகள் உடனிருந்தனர்

கொழும்பு, ஏப். 12
யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுடனான நான்காம் கட்டப் பேச்சுக்களில் நேற்று முன்தினம் கலந்து கொண்ட பின்னர், அன்றைய தினம் இரவே கொழும்பு திரும்பிய அரசுத் தரப்புப் பிரதிநிதிகள் மூவரும் உடனடியாக ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து நீண்ட நேரம் ஆலோசனை நடத்தினர்.

பேச்சுக்களின் பெறுபேறுகள் குறித்து அவர்கள் ஜனாதிபதிக்கு விளக்கியதாக கொழும்பு பத்திரிகைகள் நேற்று செய்தி வெளியிட்டன.

ஜனாதிபதியின் செயலாளர் குசுமசிறி பாலபட்டபெண்டி, இராணுவ அதிகாரி பிரிகேடியர் சிறீ பீரிஸ், கடற்படை அதிகாரி கப்டன் பிரசன்னா ராஜரட்ன ஆகியோர் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் கொழும்பை வந்தடைந்ததாகவும்—

நீண்டநேரம் அவர்கள் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியதாகவும்—

சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் படை அதிகாரிகளும் இச் சந்திப்பின்போது உடனிருந்ததாகவும் — நேற்றைய 'ஐலண்ட்' செய்தி வெளியிட்டது. (உ-3)

### ராணுவ நடவடிக்கைகளுக்கு முன்னேற்பாடாக

## வடக்கின் முக்கிய படை முகாம்களுக்கு விசேட பயிற்சி பெற்ற துருப்புகள்

யாழ்ப்பாணம், ஏப்.12
வடபகுதியின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ முகாம்களிலுள்ள இராணுவத்தினருக்குப் பதிலாக விசேட பயிற்சிபெற்ற துருப்புகள் மாற்றப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மணலாறு, முல்லைத்தீவு, ஆனையிறவு, பூநகரி இராணுவ முகாம்களிலுள்ள படையினரே இவ்வாறு அகற்றப்பட்டு அங்கு விசேட பயிற்சி பெற்ற இராணுவத்தினர் நிறுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஒரு முழு இராணுவ நடவடிக்கை தேவைப்படுமானால் அதனை சீராக மேற்கொள்வதற்குரிய முன்னேற்பாட்டு நடவடிக்கையாக இந்த மாற்றம் செய்யப்படுகின்றது என இராணுவ பகுப்பாய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ-7)

## வெள்ளியன்று எரிபொருள் தடைநீக்கம்?

கொழும்பு, ஏப். 12
வடக்கு மீது விதிக்கப்பட்டிருந்த எரிபொருள் தடை எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் நீக்கப்படலாம் என்று நேற்றைய ''வீரகேசரி'' செய்தி வெளியிட்டது.

கடல் வலயத் தடைச்சட்டமும் அன்றுமுதல் தளர்த்தப்படும் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஏப்.12
புதுவருட தினத்தை முன்னிட்டு கிளாலி - பூநகரி படகுச்சேவை இன்று புதன்கிழமை நடைபெறும். எனினும் புதுவருட தினமான நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை படகுச்சேவை இடம்பெறாது.

— இவ்வாறு விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (உ-7)

## குருநகர் நாவாந்துறைக்கு அரசுப் பிரதிநிதிகள் விஜயம்

யாழ்ப்பாணம், ஏப் 12
மீன்பிடித் தடை நீக்கம் குறித்து அரசு விதித்துள்ள புதிய அறிவிப்பின்படி, மீன்பிடிக்கத் தடை செய்யப்படும் பிரதேசங்களுக்குள் அடங்குகின்ற குருநகர், நாவாந்துறைப் பகுதிகளுக்கு அரசுத் தரப்புப் பிரதிநிதிகள் மூவரும் நேற்று விஜயம் செய்தனர்.

யாழ்ப்பாணத்தில் தங்கிநின்ற ஆயர் லெஸ்லி பெர்னாண்டோ, பேராசிரியர் உயங்கொட, சார்ள்ஸ் அபேசேகரா ஆகியோரே மேற்படி பகுதிகளில் உள்ள மீனவர்களுடன் கலந்துரையாடியதுடன் அப்பகுதிகளையும் பார்வையிட்டனர்.

புதிய ஒழுங்கு விதிகளின் படி —

படை முகாம் அமைந்துள்ள பகுதிகளில் இரண்டு கடல் மைல் பிரதேசத்துக்குள் மீனவர் பிரவேசிக்க முடியாது என்பது தெரிந்ததே. [உ-3-7]

### வெட்டுப் புள்ளியால் பாதிப்பு:

## விசேட குழு இன்று முதல் விசாரணை செய்யும்

கொழும்பு. ஏப் 12
பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்ட யாழ்.மாவட்ட மாணவர்களை யாழ் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிப்பது குறித்து ஆராய்வதற்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு தனது செயற்பாடுகளை இன்று கல்வி உயர்கல்வி அமைச்சு செயலகத்தில் ஆரம்பிக்கும் என அறிவிக்கப்படுகின்றது.

இக் குழுவுக்கு கல்வி உயர்கல்வி பிரதி அமைச்சர் விஸ்வவர்ணபால தலைமை வகிக்கிறார். இவருடன் நீதி அரசமைப்பு விவகார அமைச்சரும் பிரதி நிதி அமைச்சருமான பேராசிரியர் ஜீ எல். பீரிஸ், தேசிய கல்வி நிறுவனத் தலைவர் டாக்டர் பிரேமதாஸ உடகம ஆகியோர் இக் குழுவில் இடம் பெறுகின்றனர்.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு அதிக மாணவர்களை அனுமதிப்பதற்கென வெட்டுப்புள்ளிகளை மாற்றி அமைப்பது குறித்தும்—

இனிவரும் ஆண்டுகளில் யாழ்ப்பாண மாவட்ட மாணவர்கள் பாதிக்கப்படாத வகையில் வெட்டுப் புள்ளிகளை நிர்ணயிப்பது குறித்தும் இக்குழு ஆராயுமென்று தெரிவிக்கப்பட்டது. (உ-7)

## மட்டக்களப்பில் மக்கள் சமாதான உண்ணாவிரதம்

கொழும்பு, ஏப். 12
நாட்டில் சமாதானத்தை உருவாக்க வேண்டி மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சமாதான அடையாள உண்ணாவிரதங்கள் நேற்று முன்தினம் மேற்கொள்ளப் பட்டன.

வந்தாறுமூலை, சம்மாந்துறை, மாவடி வேம்பு, சித்தாண்டி, கழுவங்கேணி, கிரான், மொறக்கொட்டாஞ்சேனை போன்ற பிரதேசங்களிலுள்ள பெருந்திரளான மக்கள் அவ்வப்பகுதிகளிலுள்ள ஆலயங்களிலும் பொது இடங்களிலும் சமாதான அடையாள உண்ணாவிரதத்தை நேற்று முன்தினம் மேற்கொண்டனர்.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கிய வண்ணம் சமாதான உண்ணாவிரதத்தில் மக்கள் ஈடுபட்டதாக கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது. (உ-4)

## கல்கிசையில் கொள்ளை

ரயர் தயாரிப்பில் ஈடுபடும் நிறுவனம் ஒன்றின் கல்கிசைக் களஞ்சியத்துக்குள் புகுந்த ஆயுதபாணிகள் மூவர், அங்கிருந்த காவலர்களை துப்பாக்கியைக் காட்டி, கட்டிப்போட்டு விட்டு பத்து லட்சம் ரூபாவைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற இச் சம்பவத்தின் போது, காசு வைக்கப்பட்டிருந்த அறையின் சுவரை உடைத்து உள்ளே புகுந்த கொள்ளையர், அங்கிருந்த பணப்பெட்டியையும் உடைத்து பணத்தைக் கொள்ளையிட்டதுடன் அந்த நிறுவனத்துக்குச் சொந்தமான வாகனத்திலேயே தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

[மற்றொரு செய்தி 5 ஆம் பக்கத்தில்] (உ-6)

### ★ போதியளவு கையிருப்பில்:

## அத்தியாவசியப் பொருள்களுக்கு குடாநாட்டில் தட்டுப்பாடு இல்லை!

### இலங்கை வானொலிக்கு அரச அதிபர் தகவல்

கொழும்பு, ஏப். 12
''எதிர்வரும் புத்தாண்டுக்கும் அடுத்த மாதத்துக்கும் தேவையான — போதியளவு உணவுப் பொருள்கள் [ample tock] யாழ்ப்பாணத்தில கையிருப்பில் உள்ளன.

''அரிசி, மா, பருப்பு, சீனி, பால் உணவு வகைகள், மண்ணெண்ணெய் ஆகியவை உட்பட அத்தியாவசிய பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏதும் இல்லை என்று யாழ் அரச அதிபர் திரு. கே. பொன்னம்பலம் எமது செய்தியாளர்களுக்குத் தெரிவித்தார்.''

— இவ்வாறு இலங்கை வானொலி நேற்று அறிவித்தது. இலங்கை வானொலிச் செய்தியில் மேலும் கூறப்பட்டதாவது:-

இந்தப் பொருள்கள் முன்னர் மூன்று கப்பல்களிலேயே எடுத்துச் செல்லப்பட்டன. இப்போது அவை ஐந்து கப்பல்களில் அனுப்பப்படுகின்றன.

''இந்தப் பொருள்களை யாழ். குடாநாட்டுக்கு அரசாங்கம் இப்போது ஒழுங்காக அனுப்புகின்றது'' என்றும் அவர் சொன்னார்.

'இடம் பெயர்ந்த மக்கள் தங்கள் கோட்டாக்களை வாராந்த அடிப்படையில் ஒழுங்காகப் பெறுகின்றார்கள்' என்றும் அரச அதிபர் மேலும் சொன்னார்.

'கடந்த ஆண்டுகளிலும் பார்க்க இம்முறை சிறந்த முறையில் புதுவருடத்தை கொண்டாடுவதற்கு இப்பிரதேச மக்கள் தயாராகி வருகின்றனர்.'

— இவ்வாறு அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## வடபிரதேச செஞ்சிலுவைக்கான நிதி ஒதுக்கீட்டிலும் மோசடியாம்!

கொழும்பு. ஏப். 12
வெளிநாடுகளிலுள்ள உதவி வழங்குவோரிடம் இருந்து இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் சென்ற வருடம் பெறப்பட்ட 15 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணம் கணக்கில் காட்டப்படவில்லை.

செஞ்சிலுவைச் சங்கத்தில் இடம்பெற்ற மோசடிகள், துஷ்பிரயோகங்கள் பற்றி விசாரிப்பதற்கென [சுகாதார, சமூகசேவைகள்,நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ. எச் எம். பௌசியினால் நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் எம் எச். டஹாமீன் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம்,கிளிநொச்சி, வவுனியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த செஞ்சிலுவைச் சங்க கிளைகளுக்கு வலி நிவாரண மாத்திரைகளை வழங்குவதற்கு 40 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது என்றும்—

எனினும் இந்த மாத்திரைகளை வாங்குவதற்கென 25 லட்சம் ரூபா மட்டுமே செலவிடப்பட்டுள்ளது என்றும்—

மிகுதித் தொகையான 15 லட்சம் ரூபா திருப்பிச் செலுத்தப்படவில்லை என்றும் தெரிவித்தார்

செஞ்சிலுவைச் சங்கத் தலைவராது மானே யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய பகுதிக் கிளைகளுக்கு பொறுப்பாக உள்ளார்.

மேலும் செஞ்சிலுவைச்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## WANTED

**CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA.**


A Trained or graduate to teach

1) ENGLISH
2) DANCE

For the middle and upper school
Apply before April 20th 1995.

(C/946) PRINCIPAL

## திதி அஞ்சலி



மலர்வு: 10 - 06 - 1908

உதிர்வு: 16 - 03 - 1995

### திருமதி இலட்சுமி நாகலிங்கம்

திதி நாள்: 16 - 04 - 1995

தெல்லிப்பழை, தென்மயிலை (கட்டுவன்)
அமரர் நல்லதம்பி நாகலிங்கம் அவர்களின்
[முன்னாள் விதானையார்]
துணைவியார்
திருமதி இலட்சுமி நாகலிங்கம்
அவர்களது

### முதல் திதி அஞ்சலி

தெல்லி யூரின் தென்மயிலை மண்ணில்
தொல்குடி யோம்பித் துலங்கிய மரபின்
பல்லோர் போற்றிய பீடுயர் முகையே!
உன்னில் முகிழ்த்த ஊற்று கள்யாம்
மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்திட
எண்ணிலா பாசச்சுமை ஏந்தி நொந்தாயே!
உன்னில் பாசமாய் ஊறிய வூற்றை
நாளும் நம்மில் நனைய வைத்தாயே!
வாளும் வேலும் வந்து சாடாது
நீளுமுன் பாசத்தை நாமெங்கு பெறுவோம்?
அந்தோ!
பொல்லாக் காலன் பொழுது விடியுமுன்
பெயர்த் தெடுத்துப் போயினனே அம்மா
இனியெப் பிறவியில் உன்பாச நிழலை
கண்விழி பார்த்துக் களிவோ மம்மா.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள்.

முக்கிய குறிப்பு

எமது தயாரின் பிரிவை அறிந்து நேரிலும், தபாலிலும், அனுதாபமும், ஆறுதலும் தந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் பயிலிட்டி கிராமசபை மின்சார ஊழியர்களுக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றியை நவில்கின்றோம்.

இங்ஙனம்;
திருமதி நேசபூபதி நாகராஜன்,
(சங்கீத ஆசிரியை)
திரு. நா சாந்தலிங்கம்
(மின்சாரப்பகுதி)

[8480]

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 16 - 07 - 1939

மறைவு: 24 - 03 - 1994

### திருமதி நாகேஸ்வரி மதியாபரணம்

திதி: 12 - 4 - 1995

அன்பின் திருவுருவாய், அறிவுச் சுடர் விளக்காய், பண்பின் சிகரமாய், வாழ்ந்து எம்மை யெல்லாம், மீளாத்துயரில் ஆழ்த்தி விட்டு, சென்றாலும், என்றென்றும் உங்கள் நினைவுடன், ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
கணவர், பிள்ளைகள், உறவினர்.

மயிலிட்டி தெற்கு,
கட்டுவன்,
தெல்லிப்பழை. [36144]

---

மகாஜனக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

### ஆண்டுப் பொதுக்கூட்டம் - 1995

இம்மாத நடுவில் நடத்தப்படுகின்ற எமது வருடாந்தப் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது. திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

வெளியூர் அங்கத்தவர்கள் இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்காக மன்னிக்கவும்.

— நிர்வாகக்குழு

[36191]

---

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின்
கலை பண்பாட்டு அவையினரால்
ஆற்றப்படும்

# மாணவர் கலைப் பூங்கா 1

இடம்: யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு

காலம்: இன்று [12 - 04 - 1995]
புதன்கிழமை பிற்பகல் 4-30 மணி

### நிகழ்வு நிரல்

ஆரம்ப நிகழ்வாக......

★ ஈகைச் சுடரேற்றல்
★ அமைதி வணக்கம்
★ வரவேற்புரை
திரு. ச மார்க்கண்டு அவர்கள்
(ஆசிரியர், யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி)
★ தலைமையுரை
திரு. ந. இன்பன் அவர்கள்
(பொறுப்பாளர், வி. பு. மா. அமைப்பு தமிழீழம்)
★ சிறப்பு விருந்தினர் உரை
1) திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள்
(பொறுப்பாளர், வி பு க. பண்பாட்டுக்கழகம். தமிழீழம்)
2) பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள்
(தலைவர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக் கழகம்)
3) திரு பிரான்சிஸ் யோசவ் அடிகளார் அவர்கள்
(தலைவர், கல்வி மேம்பாட்டுப் பேரவை, தமிழீழம்)
★ பிரதம விருந்தினர் உரை
திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் அவர்கள்
(பொறுப்பாளர், அரசியற்துறை, தமிழீழம்)
★ சான்றிதழ் வழங்கல்
★ நன்றியுரை
திரு. ச. நெடுஞ்செழியன்
(இணைப்பாளர், கலைபண்பாட்டு அவை,
(வி. பு மாணவர் அமைப்பு, தமிழீழம்)

கலை நிகழ்வாக....

ஆக்க இசை
யா/ மீசாலை வீரசிங்கம் ம. வி.

கிராமிய இசை:
கப்பல் பாட்டு
யா/ நெல்லியடி மத்திய ம. வி.

செந்நெறி நடனம்
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

சிறுவர் நாடகம்:
பாலுக்குப் பாலகன்
சைவ வித்தியாவிருத்திச் சங்க
சிறுவர் வாழ்வு இல்லம் — திருநெல்வேலி

நாடகம்:
தப்பி வந்த தாடி ஆடு
யாழ்/ வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்

வரலாற்று நாடகம்:
சத்தியவான் சாவித்திரி
யா/ இந்துக் கல்லூரி

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

வி. பு. மாணவர் அமைப்பின்-
கலை பண்பாட்டு அவை,
தமிழீழம்.

---

## புதுவருட வாழ்த்துக்களை

தெரிவிக்கின்றனர்

**சிவகணேசன் பட்டுச் சோலை**
41, சோதியா தெரு, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

**கணேசன் பட்டுச் சோலை**
201, காங்கேசன்துறைச் சாலை,
யாழ்ப்பாணம்.

---

## ஆலயங்களில்

யாழ்ப்பாணம், ஏப். 12

திருநெல்வேலி நீலாயதாட்சி சமேத காயாரோகணஸ்வாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு நேற்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை தெய்வீக தொடர் இசை சொற்பொழிவுகள் இடம்பெறும்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை அன்னைதாசன் க. ஆனந்தராசாவின் சிவனருட் செல்வர்கள் என்ற சொற்பொழிவும் தொடர்ந்து 30 ஆம் திகதி வரை திரு. சிவகுமாரின் திருவிளையாடற் புராணம் சொற்பொழிவும் இடம்பெறும். (இ-17)

## இசை அரங்கில் இன்று

நல்லூர் பண்டாரக்குளம் ஸ்ரீ விநாயகர் ஆலய உற்சவத்தை ஒட்டி ஆலய தர்மகர்த்தா சபையும் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றமும் இணைந்து வழங்கும் தெய்வீக இசை அரங்கு நிகழ்வில் இன்று புதன்கிழமை இரவு 8 மணிக்கு செல்வி ஜெகன் மோகினி ஜெகநாதன் 8. 45 மணிக்கு என். வி. எம் நவரத்தினம் ஆகியோரின் பாட்டு இடம் பெறும்.

★ ★ ★

யாழ்ப்பாணம் ஏப். 12

வண்ணை காமாட்சி அம்பாள் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையம் நடத்தி வரும் ஸ்ரீ காமாட்சி இசை அரங்கில் இன்று புதன்கிழமை இரவு 7. 30 மணிக்கு செல்விகள் ச. சாருமதி, வ. கோமா, சி. சாமினி ஆகியோரின் வீணை இசையும் செல்விகள் செ. காஞ்சனா பொ. சயந்தினி ஆகியோரின் பாட்டும் இடம் பெறும்.

(இ-14-111)

---

**அறிவித்தல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
மருத்துவ பீடம்.
மூன்றாம் தவணையைப் பிற்போடல்

17 - 04 - 1995 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த பீடத்தின் மூன்றாம் தவணை 02 - 05 - 1995 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

பதிவாளர்.

(சி- 948)

---

## வீடமைப்புக்கடன் குறித்து முகாமையாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஏப் 12

வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீடுகட்டக் கடன் பெற்றவர்களின் கடன் தொடர்பாக யாழ்ப்பாணம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் அளித்த விளக்கம் வருமாறு:-

23-3-95 திகதியன்று வெளியிடப்பட்ட பத்திரிகையில் 1984ஆம் ஆண்டு வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடம் கடன்பெற்றவர்கள் அக்கடனை திருப்பிச் செலுத்தத் தேவையில்லை என்று முன்பு அறிவிக்கப்பட்டதாகவும் தற்போது மீளவும் இக்கடனை செலுத்துமாறு பணிக்கப்பட்டுள்ளதால் இக்கடனாளிகள் திடீர் அதிர்ச்சிக்குள்ளானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீடமைப்பு அதிகார சபையில் கடன் பெற்றவர்கள் எவருக்கும் இக்கடனைத் திருப்பி செலுத்தத் தேவையில்லை என அதிகாரபூர்வமாக ஒருபோதும் அறிவிக்கப்படவில்லை. 1988ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வீடமைப்பு சுற்றறிக்கையின்படி 1988ஆம் ஆண்டிற்கு முன்பு இவ் அதிகாரசபையில் கடன் பெற்றவர்களில் 31-8-1988ற்கு முன்பிருந்தே உணவு முத்திரை வைத்திருந்தவர்கள் மாத்திரம் இதே திகதி வரையுள்ள நிலுவையை செலுத்த வேண்டுமென்றும் அதற்குப் பிறகு அவர்களின் மாதாந்த கடன் அறவீட்டை அவர்களிடமிருந்து அறவிடுவதை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதென்றும் பின்பு அவர்கள் தமது உணவு முத்திரையை இழக்கின்றபோது இழந்த திகதியிலிருந்து மீளவும் தமது மாதாந்த கடன் அறவீட்டைச் செலுத்த வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி கடன் பெற்றவர்களின் உணவு முத்திரையைக் கொண்டிராதவர்களிற்கு கடனை திரும்பச் செலுத்துவதிலிருந்து எந்தவிதமான விதிவிலக்கும் அளிக்கப்படவில்லை. அவர்கள் தொடர்ந்து கடன் தவணையை தவறாது செலுத்த வேண்டும்.

கடன்பெற்ற சகலரையும் கடன் செலுத்தக் கோரும் கடிதங்கள் மாவட்ட அலுவலகத்தால் அனுப்பப்பட்டு வருகின்றன. இவர்கள் தமது கட்டணங்களை பிரதி புதன்கிழமைதோறும் பிரதேச செயலகங்களிற்கு சமூகமளிக்கும் வீடமைப்பு அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடம் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன் இக்கடன் மீதான தமது நிலுவை தொடர்பான விவரங்களை நேரடியாக மாவட்ட அலுவலகங்களுடன் தொடர்பு கொள்வதன் மூலமும் பெற்றுக் கொள்ளலாம்.

இவர்களிடமிருந்து அறவிடப்படும் தவணைக் கட்டணங்களே மீண்டும் இம்மாவட்டத்தில் வீடமைப்புக் கடனாக வழங்கப்பட்டு வருகின்றது. எனவே ஏற்கனவே கடன் பெற்றவர்கள் தமது அறவீட்டை ஒழுங்காகச் செலுத்துவதன்மூலம் வீடற்ற மக்கள் வீடொன்றைப் பெற்றுக் கொள்ளுவதற்கு உதவி புரியக்கூடிய வாய்ப்பொன்றும் உருவாகியுள்ளது.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## இன்று

கொழுபுத்துறை சனசமூக நிலையத்தின் 45 ஆவது ஆண்டு புதுவருடதின விழாவை முன்னிட்டு இன்று காலை 9 மணிக்கு கட்டுரைப் போட்டியும், பிற்பகல் 3 மணிக்கு பேச்சுப் போட்டியும் கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் இடம் பெறும். இப்போட்டிகள் நான்கு பிரிவுகளாக நடத்தப்படும். [உ-30]

★ ★ ★

சண்டிலிப்பாய் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் 2, மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும் என கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். [உ]

---

## முக்கிய அறிவித்தல்

வலிகாமம் மேற்கு கலாச்சாரப் பேரவையினரால் 14 - 04 - 1995 அன்று நடத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

✶ சீட்டிழுப்புத் திகதி பின்னர் பத்திரிகை மூலம் அறியத்தரப்படும்.

கா. சந்திரராசா
தலைவர்,
கலாச்சாரப் பேரவை,
வலிகாமம் மேற்கு.

(சி -950)

---

உ

சுன்னாகம் கிழக்கு ஊரிசாட்டி
சிவபூதராயர் தேவஸ்தானம்

# ★ சித்திரத்தேர் வெள்ளோட்டம் ★

**12-04-1995** புதன்கிழமை

காலை 8 00 மணி: அபிஷேகமும், பூசையும்
காலை 9 00 மணி: சித்திரத்தேர் வெள்ளோட்டம்
காலை 9 30 மணி:

புத்தூர் ஸ்ரீ காளிகா சிற்பாலய சிற்பாசாரி விஸ்வப் பிரம்மஸ்ரீ செ. பாலச்சந்திரன் குழுவினரை கௌரவித்து பொன்னாடை போர்த்துதலும், பொற்கிழி வழங்குதலும்



விஸ்வப் பிரம்மஸ்ரீ
செ. பாலச்சந்திரன்

காலை 9 45 மணி: ஆசியுரை வழங்கல்

முத்தமிழ்க் குருமணி சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள்
கதிரமலைச் சிவன் தேவஸ்தானம் - சுன்னாகம்
சிவஸ்ரீ சு. இராசேந்திரக் குருக்கள்
கந்தசாமி கோயில் - நீர்வேலி
துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் - தெல்லிப்பழை
திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்
(முன்னாள் அதிபர் - இராமநாதன் கல்லூரி, மயிலணி, சுன்னாகம்)
சிவானந்தவாரிதி சிவத்திரு. வ. குமாரசாமி அவர்கள்
குராவத்தை, சுன்னாகம்

சுபம்.

சிவபூதராயர் தேவஸ்தானம்,
சுன்னாகம் கிழக்கு.
11-04-1995

தேர்த்திருப்பணிச் சபை

(8320)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரி - கல்வயல்

# பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய
## ★ புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா ★

12 - 04 - 1995

## ஆதீன முதல்வரின் ஆசி

அருளோங்கும், சைவமெய்யன்பர்களே!

கல்வயல், பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு. புதிய சித்திரத்தேர் அமைத்து. வெள்ளோட்ட விழா நிகழ விருப்பதறிந்தோம். பெருமகிழ்ச்சி, பிரணவ சொருபியான அவருக்கு நாமாற்றும் கைங்கரியங்கள் எல்லாம் அதி உயர்ந்த ஸ்தானம் வகிப்பன.

விழாக்களில் மேலானது ரதோற்சவம் தேர் என்பது நிலையிலா வாழ்க்கையைத் தேர்ந்த தென்பதே. மேல் விதானத்தில் ஆறு ஆதாரங்களும், கீழ்ப் பீடத்தில் மானிடப் பிறப்பு தொடக்கம் இறப்புவரை சிற்ப விளக்கமும் உண்டு. இதனை நிறைவேற்ற நிதி உதவி ஈந்தும், தொண்டுகள் புரிந்தும் மனமுவந்து முன்வந்த அன்பர்களைப் பாராட்டி, எல்லோருக்கும் நல்லாசிகளை வழங்குகிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
குருமஹா சந்நிதானம்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

## பிரதமகுரு ஆசிச் செய்தி

கல்வயல், பெருங்குளம்பதி, ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகப் பெருமான் எழுந்தருளிக் கருணைபாலிக்க சித்திரத் தேர் உருவாக்கி ஓட்டம் செய்யும் தெய்வீக நிகழ்ச்சி அற்புக முறையில் திருவருள் பாங்குடன் அமைந்துள்ளது. உலகில் அமைதியும் அன்பும் நிலவ இத் தகு பக்திப் பணிகள் பல்க வேண்டும். தெய்வம் உண்டு என்பதோர் சித்தம் உண்டாகவும் உண்டாக்கவும் நிலையான திருப்பணிகள் அவசியம்.

இத் தெய்வீகத் திருப்பணியை சிறப்புறச் செய்து முடிக்க முன்வந்து பொருள் உதவி செய்தவர்களுக்கும் இத் திருத் தொண்டில் அயராது உழைத்தவர்களுக்கும் இதனை நல்ல முறையில் அமைத்த ஸ்தபதியார் சிற்பக் கலைஞர் கலாமோகன் குழுவினருக்கும், ஆலய நிர்வாகிகள், தேர்த் திருப்பணிச் சபையினர், கல்வயல் பெருங்குளம் வாழ் சைவ அன்பர்கள் யாவருக்கும் இந் நிகழ்ச்சியை உணர்ந்து உதவி செய்தவர்களுக்கும் தேரோட்டம் நிகழ இருக்கும் இந் நன்னாளில் ஐங்கரப் பெருமானின் திருவடி போற்றி எல்லா நலன்களும் பெற்ற இன்புற்று வாழ நல்லாசி கூறுகின்றோம்.

இச் சித்திரத் தேர் காட்சியைப் பார்த்தும். நினைந்தும் வணங்குவோமாக! வாழ்த்துவோமாக!

சுபம்.

சிவாகம வித்பத் சோதி புன்னாலைக் கட்டுவன்
சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள்

## புதிய சித்திரத்தேரை நிர்மாணித்த சிற்பாசாரியாரின் சிறப்புரை

கலைகள் பல. அவற்றில் சிற்பக்கலையானது, மக்களின் வாழ்வு ஆலய வணக்கம் என்பவற்றுடன் தொடர்புடையது. ஆலயத்தின் அமைப்புக்கள் ஆலய விழாவுக்கான வாகனங்கள், தேர், மஞ்சம், சப்பறம் என்பவற்றின் அமைவுகள் சிற்பக்கலையின் முக்கிய அம்சங்களாகும். இவற்றில் முக்கியமானது சித்திரத்தேர்.

ஒரு சிற்பியின் கைவண்ணம் கலையம்சம் தெய்வீகத் தன்மை என்பவற்றுடன் உருவாகுவதே சித்திரத்தேர். இத்தகைய தெய்வீகக் கலையை பயிற்றுவித்த எமது குருவாகிய அமரர் "கலாகேசரி" ஆ. தம்பித்துரை அவர்களுக்கு எமது முதல் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஆலயங்களில் சித்திரத் தேரை உருவாக்கும்போது அமை முறையே நாகரம், வேசரம், திராவிடம் என மூன்று பகுதிகளாக வகுக்கப் படுகின்றன. இங்கே உருவாக்கப்பட்ட தேர் திராவிட



மரபைத் தழுவியதாகவும் இரட்டை முக பத்திரங்கள் மீள்க்கப்பட்டதாகவும் தனிச் சிறப்புடையதாகவும் விளங்குகின்றது.

தேர் ஓடுதல் என்னும் செயலில் நம் உடல் தத்துவத்தை நன்கு விளக்குகின்றது. சரீரத்தை ரதம் என்றும். அதன் உள் இருக்கும் ஆத்மாவை ரதி என்றும் கருத வேண்டுமென ஞான சாஸ்திரங்கள் புகட்டுகின்றன. சித்திரத் தேரை சிற்ப சாஸ்திரத்திற்கு அமைய அழகுறச் செய்வதற்கு முதலில் கல்வயல் அம்பலவாண வீரகத்தி விநாயகப் பெருமானின திருவருள வழி செய்தது. பொருள்களையும் வசதிகளையும் ஊக்கத்தையும் திருப்பணிச்சபையினர் நன்கு செய்தார்கள். பிள்ளையார் உதவியுடன் இச்சித்திரத் தேர் மூலம் எமது சிற்பக்கலை வரைவு நிலைக்கவும், வழிசெய்த திருப்பணிச் சபையினரையும் அன்புடைய மக்களையும் எமது கலைஞர்கள் அனைவரையும் வாழ்த்தி வணங்குவதில் பெருமை கொள்ளுகிறேன்.

சிற்பக் கலைச்செல்வன்
மட்டுவிலூர்
கி. கலாமோகன்

### தென்மராட்சி திவ்விய ஜீவன சங்க தலைவரின் வாழ்த்துரை

புத்தம் புதியதேர் வருகுது தேர்ந்து வாழி
தேரில் ஞான விநாயகனை ஓர்ந்து வாழி
பிரபஞ்சத்தைக் குறிக்கொள்வது ஆய்ந்து வாழி
தேர் தேர் என்றே உனை உணர்ந்து என்றும் வாழி
வாழி வாழி விநாயகரோ டிணங்கி வாழி
வாழ்கவென ஒன்றி நின்று வாழ்க வாரீர்
வார்த்தை யின்று ஏத்தலன்றிக் கூட வாரீர்
வாழ்க பல்லாண்டெனவே பாட வாரீர்

க. இராசரத்தினம்
தலைவர்
தென்மராட்சி திவ்விய ஜீவன சங்கம்

### நிகழ்ச்சி விவரம்

சித்திரத் தேர் வெள்ளோட்டம் — மு. ப. 10 மணி

வெள்ளோட்டம் நிறைவெய்தியதும் சிற்பாசிரியர் கி. கலாமோகன் அவர்கள் கௌரவிக்கப்படுவார்.

கௌரவிப்பு விழாவில் அருளுரைகள், ஆசியுரைகள், சிறப்புரைகள், பாராட்டுரைகள் என்பன இடம்பெறும்.

## ஆலய பரிபாலனசபையின் தலைவர் ஆசிச்செய்தி

அருள் மிகு கல்வயல் பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகப்பெருமான் திருவருட்சிறப்பால் ஆலயபரிபாலன் சபையினர், திருப்பணிச்சபையினர், அடியார்கள், அன்பர்கள் பிரதமகுருக்கள், நித்திய பூசகர் அனைவரினதும் ஏகோபித்த ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கப்பெற்ற சில ஆண்டுகளாக இவ்வாலயத்தில் திருப்பணிகளும் நித்திய நைமித்திய பூசைகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இந்த வகையில் சித்திரத் தேர்த் திருப்பணி பூர்த்தியாகி வெள்ளோட்ட விழா நடைபெறத் திருவருள் பாலித்தமை எல்லோருக்கும் பேரானந்தம் விளைவிப்பதாகும்.

இத் தெய்வீகத் திருப்பணியில் ஈடுபட்ட யாவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். இதன் நிறைவுக்கு பல விதங்களிலும் தமது பங்களிப்பினை வழங்கிய அனைவருக்கும் எமது மன மார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

—சுபம் - நன்றி
வே. பாலசுப்பிரமணியம்

## தேர்த் திருப்பணிச் சபைத் தலைவரின் பாராட்டும் நன்றியும்

கல்வயல் பெருங்குளம் ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகப் பெருமானின் சித்திரத்தேர் திருப்பணி அன்பர்கள் பலரின் ஏகோபித்த ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டு வெள்ளோட்டம் காணும் திருவருட் திறனை எண்ணி வணங்குவோமாக.

இப் புனித கைங்கரியத்துக்கு யார் யார் காரணர்களாயுள்ளனரோ, யார் யார் மனமுவந்து நிதியுதவியும் பொருளுதவியும் புரிந்துள்ளனரோ அவர்கள் அனைவரும் எமது பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவராவர்.

இச் சித்திரத் தேரை உருவாக்கிய கலைஞர் கி. கலாமோகன் அவர்களது கைவண்ணத்தினால் பல சித்திரத்தேர்கள் இப் பிரதேசத்தின் பல பகுதிகளிலும் உருவாகியுள்ளன. மேன்மேலும் வளர் பிறையென இவரது கலைப்பணி சிறந்த தெய்வீக நலம் சிறக்க விநாயகப் பெருமானின் திருவருளை வேண்டுகின்றோம்.

விழா சிறப்பாக நடைபெறவும், நாடும் மக்களும் எல்லா நலன்களும் எய்தவும், எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் அருள் பாலிப்பாராக

நன்றி
— சி. இராமலிங்கம்

# பன்குளம் பகுதியில் சிங்களவரை குடியேற்றுவதற்கு அரசு முயற்சி

## நிலஅளவையாளர் குழுவின் பணி ஆரம்பம்

திருகோணமலை ஏப். 12

திருகோணமலை பன்குளம் பகுதியில் சிங்களக் குடியேற்றம் ஒன்றை ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கொழும்பில் இருந்து நேரடியாக வந்துள்ள நில அளவைத் திணைக்களக் குழு ஒன்று திருகோணமலை நகர சபை விடுதியில் தங்கியிருந்து இதற்கான பணியை மேற் கொள்வதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

திருகோணமலையில் செயற்படும் பிரதேச நில அளவைத் திணைக்களத்துக்கு எந்த வித அறிவிப்பும் இன்றி கொழும்பில் இருந்து நேரடியாக வந்துள்ள இக் குழு தமது பணியை ஆரம்பித்துள்ளதாகவும்—

நில அளவைத் திணைக்கள மா அதிபதியின் நேரடி கண்காணிப்பில் இக்குழு செயற்படுவதாகவும்— தெரியவந்தது.

இராணுவத் தேவைக்காக அந்தப்பகுதி நிலங்கள் அளக்கப்படுவதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தபோதும், பாரிய சிங்களக் குடியேற்றம் ஒன்றை மேற்கொள்ளவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டது.

(இ-148)

### மல்லாகம் காளிகாதேவி ஆலய விசேட பூசையும் கலை நிகழ்ச்சிகளும்

இன்று (12-04-1995) புதன்கிழமை மாலை 6-00 மணிக்கு ஆலயத்தில் விசேட பூசை நடைபெற்று தொடர்ந்து 7-00 மணிக்கு

கலை நிகழ்ச்சி

இசையமைப்பாளர் எஸ். பொன்னுத்துரையின் மாணவர்களாகிய
செல்வன் சவுந்தராசன் மயூரன்
செல்வன் சந்திரகலாதர சர்மா
வசந்தஸ்காந்தா
ஆகியோரின்

★ ஒகன் வாத்திய இசை ★

செல்வி பிறேமலதா பொன்னுத்துரை
செல்வி விஜியமாலா சோமசுந்தரம்
ஆகியோரது

இன்னிசைக் கச்சேரி

நீராவியடி கலைக் கல்லூரி வழங்கும்
கதகளி பரதகலாமணி இலங்கை வேந்தனும்
அவரது மாணவர்களும் இணைந்து வழங்கும்

கதகளி பரதநாட்டியம்
என்பன இடம்பெறும்.

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

இங்ஙனம்:
வ. சவுந்தரராசன் (சவுந்து)

[36179]

## அன்புவழிபுரத்தில் தமிழ்இளைஞன் மீது தாக்கு

திருகோணமலை, ஏப். 12

திருகோணமலை அன்புவழிபுரம் பகுதியை சுற்றி வளைத்த இராணுவத்தினர் 30வயது தமிழர் ஒருவரைக் கைதுசெய்து கண்டபடி தாக்கி முகாமுக்கு அழைத்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது

சேமா என்பவரே கைதானவர் ஆவார். தாக்கி முகாமுக்கு அழைத்துச் சென்ற படையினர் பின்னர் அவரை விடுதலை செய்தனர்.

பால்விற்பு சிவியம் நடத்தும் ஒருவரின் சகோதரரின் பெயரைக் கூறியே இவர் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. க. தங்கத்துரைக்கு முறைப்பாடு செய்யப்பட்டதாகவும் அச்சமயம் அங்கு அவர் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

மோதல் தவிர்ப்பு உடன்பாடு நடைமுறையில் உள்ள இந்த நேரத்தில் நடந்துள்ள இந்தச் சம்பவம் குறித்து அப்பகுதி மக்கள் விடுதலைப் புலிகளுக்கும் முறையிட்டுள்ளனர்.

(இ-148)

## தற்கொலைப் படையினர் 8 பேர் கொழும்பிலாம்

கொழும்பு, ஏப். 12

விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படைப் பிரிவைச் சேர்ந்த 8பேர் கொழும்பு வந்துள்ளனர் என்று புலனாய்வுத்துறைக்கு தகவல் கிடைத்துள்ளதாக பொலீஸார் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் பாரிய தாக்குதலை மேற்கொள்ளும் நோக்குடன் இவர்கள் வந்திருக்கலாம் எனத் தெரிவித்த பொலீஸார் அவர்களைக் கண்டு பிடிக்க தேடுதல் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

பொலிஸ், இராணுவ கடற்படையினர் கூட்டாக இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் வீதிகளில் [illegible] ரோந்து [illegible] யிடப்பட்டுவதாகவும்— தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-

### புலமைப் பரிசில் பரீட்சை

கொழும்பு, ஏப். 12

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைகள் எதிர்வரும் டிசம்பர்மாதம் முதலாம் வாரத்தில் நடைபெற விருப்பதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது. [இ-3]

### புலிகளின் குரல் வானொலியில்

12 — 04 — 1995

புதன் இரவு

- ★ 8-02 — குயிலோசை - நிகழ்ச்சியில் "ஆனையை அடக்கிய அரிய'த்தை" நாட்டுக் கூத்தின் 2 ஆம் பகுதி
- ★ 8-20 — வாத்தியகானங்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — நாடகம் - வல்வையூரான் எழுதிய "சந்தி சிரிக்குது" என்பன இடம்பெறும்.

13 — 04 — 1995

வியாழன் காலை

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — விடுதலை கீதங்கள்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி என்பன இடம்பெறும்.

### தமிழீழ வானொலி

ஒலிபரப்பு

புதன் மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — படப் பாடல்கள்
- ★ 5-30 — அறிவூற்று
- ★ 6-00 — சிந்தனைக்கு சிலவிநாடிகள்
- ★ 6-02 — உங்கள் தெரிவு
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- 6-20 — உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி என்பன இடம்பெறும்.

## பண நோட்டுக்களை மாற்ற முடியாது கஷ்டம்

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ். மாவட்டத்தில் சில பகுதிகளில் பண நோட்டுக்களை மாற்றுவதில் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

கடைகளில் 100 ரூபா நோட்டை மாற்றி மீதிப்பணம் கொடுப்பதற்குக்கூட வர்த்தகர்கள் திண்டாடுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒய்வூதியம் வழங்கும் ப. நோ. கூ. சங்க கிராமிய வங்கிகளும், பொதுசன உதவிப் பணம் வழங்கும் சில தபாலகங்களும் கூட இந்த சிரமத்தை எதிர்நோக்குகின்றன.

பணம் சில்லறையாக இல்லாத காரணத்தால் பணத்தை வழங்கி வாடிக்கையாளரை பிரித்தெடுக்குமாறும் கூறப்படுகின்றதாம்.

புதுவருடப் பண்டிகை வருவதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பணம் இருந்தும் அதனை மாற்ற முடியாமையினால் பொருள்களை வாங்க முடியாமல் பொதுமக்கள் சிரமப்படுகின்றனர். (இ-14-135)

### 60 ஆவது பிறந்த நாள் நினைவு

பொன்னாலை மண்ணில் தோற்றம்: 12-04-1935

மலேசியா மண்ணில் மறைவு: 16-08-1993

சின்னையா பாலகிருஷ்ணன்

அறுபதாவது பிறந்த தினத்தை
ஆவலோடு எதிர்பார்த்து
ஆண்டு நிறைவு [06-08-1994] அழுது அழுது
நடத்தி விட்டேன்
உன் வரவை உன் வாசல் பார்த்திருக்க
உன் மனைவி மக்கள் காத்திருக்க - நீ
மர்மமாய் மறைந்த மாயமென்ன
மலர்களைப் போல் நீ உலர்ந்து விட்டாய்
உன்னை வாழ வைத்தேனென்று
அமைதி கண்டாள்
கலைந்திடும் கனவுகள் நீ படைத்தாய்
அவள் [சின்னக்கா] கண்ணீர் கடலில்
ஆழ்ந்துவிட்டாள்.

பிரிவால் துயருறும்,
திருமதி லோகாம்பிகை இராசநாயகம்.
(சின்னக்கா)

தொல்புரம்,
சுழிபுரம்.

[36188]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு ராஜ வீதி, அம்பியவளை தலம் பத்தையில் றோட்டு முகப்புடன் 5½ பரப்புக் காணி "சேவயர்" வரைபடம் இணற்றுப் பங்குடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திரு சி. கனகரத்தினம், சட்டத்தரணி J. P. கல்வியங்காடு. [36172]

நல்லின மறெக்ஸ் தடுப்பூசி ஏற்றிய சேவல் குஞ்சுகளும், புறொயிலர் இறைச்சிக்குஞ்சுகளும் 12-04-95 காலை 9.00 மணி தொடக்கம் விநியோகிக்கப்படும். சேவல் குஞ்சு ஒன்று 15/- ரூபா. உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன் மல்வம் வீதியூடாக சிங்கம் வீதி, உடுவில. [36187]

### வாழ்து மடல்கள்

புத்தாண்டு வாழ்த்து மடல்கள் இரகுநாதையர் பஞ்சாங்கம் மொத்தமாகவும், சில்லறையாகவும் 94ஆம் ஆண்டு உயர்கல்வி வெளியீடு: விலங்கியல் A/L பாஸ்பேப்பர் வர்த்தகம் நிதியியலும் வெளிவந்து விட்டது மகிமிலன், ஸ்ரீகாந். யாழ் நல்லூர். [சி-644]

### கோழிக்குஞ்சு விற்பனை

Prima Lohmann White வெள்ளை பேடுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு நல்லூர் வீடியோ சென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். [36132]

## வவுனியாவில் எலும்புக் கூடு

கொழும்பு, ஏப். 12
வவுனியா, பாலாமைமல்கல் லு எனற இடத்தில் மனித எலும்புக்கூடு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கண்டெடுக்கப்பட்ட இந்த எலும்புக்கூடு ஒரு ஆணுடையது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

எனினும் இவர் எவ்வாறு மரணமானார் என்ற விவரங்கள் தெரியவரவில்லை.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலீஸார் மேற்கொண்டுள்ளனர். [இ-5]

## பங்கீட்டுக்கு பொருள்கள்

யாழ்ப்பாணம் ஏப். 12
புதுவருடத்தை முன்னிட்டு யாழ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் பங்கீட்டு அட்டைக்கு பொருள்களை விநியோகித்து வருகின்றது.

சீனி, மா, மைசூர் பருப்பு, தேங்காய் எண்ணெய் மற்றும் சில பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. [இ-17]

## விஷமிகள் பரப்பும் வதந்தி

அச்சுவேலி, ஏப். 12
வல்லை வெளி வீதியில் தலையில்லாத— முண்ட— மனிதர்கள் இரவில் நடமாடுவதாக விஷமிகள் சிலர் வதந்தி பரப்பி உள்ளனராம்.

இதனால் வல்லை வீதியால் இரவிலும் அதிகாலையிலும் பிரயாணம் செய்யும் வியாபாரிகள் அஞ்சுவதாகத் தெரிவிக்கப்படுகிறது [இ-14-11]

## அலுவலக திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப். 12
யாழ் இந்துசமயப் பேரவைக்கான அலுவலகத் திறப்பு விழா இன்று புதன் கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு பேரவைத் தலைவர் ஆத்மஜோதி திரு. நா. முத்தையா அவர்களால் திறந்து வைக்கப்படும்.

மேற்படி அலுவலகம் கோயில் வீதி, நல்லூரில் அமைந்துள்ளது. (இ-14)

## ஐ. தே. க. வின் பேரணி மீது காடையர் தாக்கு

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள வலப்பனையில் நடந்த ஐ. தே. க. பேரணி மீது காடையர் குழு ஒன்று தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவம் குறித்து பொலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ-3)

---

## கோப்பாய் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் அவர்களின் சேவை நலம் போற்றும் மலர்

# கல்வி நிர்வாக அமைப்பில் களம் பல கண்டவர்

திரு. பொ. வீரபத்திரன் அவர்கள் தமது ஆரம்பக் கல்வியை யாழ். நகரின் புகழ் பூத்த கல்லூரிகளில் ஒன்றான வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஆரம்பித்தார்.

அக்கல்லூரியில் எஸ். எஸ். ஸி வரை பயின்றார். இளமைக் காலத்தில் சாரணர் அமைப்பில் சேர்ந்து சேவை செய்யும் மனப்பான்மையை வளர்த்துக் கொண்டார்.

**தலைமைத்துவ பண்பு**

தொடர்ந்து பிரபல்யம் மிக்க கல்லூரிகளில் ஒன்றான ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் விஞ்ஞானக் கல்வியை மேற்கொண்டார். அக்கல்லூரியின் மாணவர் மன்றங்களின் தலைவர், செயலாளர் போன்ற பதவிகளை வகித்து தனது தலைமைத்துவப் பண்பை வளர்த்துக் கொண்டார்.

அக்கல்லூரியில் எச். எஸ். ஸி. பரீட்சையில் சித்தியடைந்து உயர்கல்வியைப் பெறும் பொருட்டு தமிழ் நாட்டில் உள்ள ஜமால் முகமது கல்லூரியில் விஞ்ஞான இடைநிலைக் கல்வியை மேற்கொண்டார். இக்காலத்தில கல்லூரியின் கட்டுரை அமைப்பிலும், சமூக சேவைக்கழகம், இயற்கை வரலாற்றுக் கழகம் போன்றவற்றிலும் பங்குபற்றி தனது ஆளுமையை வளர்த்துக் கொண்டார்.

பின்பு சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் விஞ்ஞான மாணிப்பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். அக்கால விஞ்ஞானதுறைப் பட்டதாரிகளில விரல் விட்டு எண்ணக் கூடியவர்களில் ஒருவராக இவர் விளங்கினார்.

வித்தியோதய பல்கலைக் கழகத்தில் பி. ஏ. (சிறப்பு) பட்டத்தை மெய்யியல் பாடத்தில் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து இலங்கை பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்புளோமா பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

**கல்விச் சேவை**

இவ்வாறு கல்வியில் உச்ச கட்டத்தைப் பெற்றுக் கொண்ட திரு. வீரபத்திரன் அவர்கள், 1-3-1960 இல் அரச கரும மொழித் திணைக்களத்தில் அநராதி உதவியாளர் என்ற பதவி உத்தியோகத்துடன் தனது கல்விச் சேவையை ஆரம்பித்தார். ஐந்து வருடங்களின் பின் அதே திணைக்களத்தில் பதிப்பாசிரியர் என்ற தரத்துக்கு பதவி உயர்வு பெற்றார். தனது சேவையின் திறமையினால் 1973 ஆம் ஆண்டு விஞ்ஞான வட்டாரக் கல்வி அதிகாரி என்ற பதவியில் மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா போன்ற மாவட்டங்களில் பதின்மூன்று வருடங்கள் விஞ்ஞானக் கல்வியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு உழைத்தார்.

அதன் பயனாக 1986 ஆம் ஆண்டு கல்வி அதிகாரி என்ற பதவிக்கு உயர்வு பெற்றார். இச்சேவையை வவுனியா மாவட்டத்தில் மேற்கொள்ளும் போது 1988 இல் பிரதம கல்வி அதிகாரி என்ற பதவிக்கு உயர்த்தப்பட்டார்.

**சொந்த மாவட்டத்தில்**

29 வருடங்களுக்கு மேலாக வெளிமாவட்டங்களில் சேவையாற்றிய பின் தனது சொந்த மாவட்டமான யாழ்ப்பாணத்திற்கு கல்விச் சேவை செய்யும் பணி 1989 இல் கிடைக்கப்பெற்றது. கல்வி நிருவாகப் பன்முகப் படுத்தலின் கீழ் வட மாகாணக் கல்வி அதிகாரியாக பல இடர்கள் மத்தியிலும் சேவையாற்றினார்.

தனது பணியை மேற்கொள்ள யாழ். நகரில் இருந்து பருத்தித்துறைக்கு சைக்கிளில் பிரயாணம் செய்து உழைத்த பெரியவர்.

அங்கிருந்து இடமாற்றம் பெற்று யாழ் கல்வித்திணைக்களத்தின் பிரதம திட்டமிடல் அதிகாரியாகவும் பின் சாவகச்சேரி, சங்கானை போன்ற கல்விக் கோட்டங்களின் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி பின் கோப்பாய்க் கல்விக்கோட்டத்திற்கு பிரதிக்கல்விப் பணிப்பாளராகவும் இடமாற்றம் பெற்றுச் சேவையாற்றினார்.

**ஓய்வின்றி உழைப்பு**

இக்கல்விக் கோட்டத்தில் 43 பாடசாலைகள் அமைந்துள்ளன. இப்பாடசாலைகளின் சமமான கல்வி அபிவிருத்திக்கு தனது முழுநேரத்தையும் செலவிட்டார். தனது வாழ்விடத்தில் இருந்து ஒவ்வொரு பாடசாலைக்கும் சைக்கிளிலேயே சென்று ஓய்வின்றி உழைத்த ஒருவர்.

அதிபர்கள், ஆசிரியர்களுடன் அன்பாகப் பழகி கற்றல் – கற்பித்தல் செயற்பாட்டினை இனிதே நிறைவேற்றிய சிறந்த கல்வி நிருவாகி.

எதையும் ஆழ்ந்து சிந்திக்கும் நோக்கம் உடையவர் இவரது நண்பர்கள் இவரை செல்லமாக "டொக்டர்" என அழைப்பர். அச்செல்லப் பெயருக்கு அவர் பொருத்தமானவரே!

கோப்பாய் கல்விக்கோட்டப் பாடசாலைகளின் மூத்தறிவு இல்லாத பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக பல திட்டங்களை அமுல்படுத்தி, அவற்றை வெளி உலகிறகு கொண்டுவந்த ஒரு கல்விச் சேவையாளர், நல்ல மனிதர், நல்ல பண்பாளர், நல்ல கல்விமான், எல்லோருக்கும் இனியவர்.

இவர் தனது 60ஆவது வயதினைப் பூர்த்திசெய்து 20-3-1995இல் ஓய்வுபெற்றுள்ளார். அவரது சேவையினை நன்றியுணர்வுடன் வாழ்த்துவதோடு மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து சேவையாற்ற எல்லாம்வல்ல இறைவன் துணைபுரிவாராக.

**சிறந்த கல்விச் சேவையாளர்**



பொ. வீரபத்திரன்
B. Sc., B. A. [Hons]
Dip – in – Ed.
S. L. E. A. S

கோப்பாய் கல்விக்கோட்ட பாடசாலை அதிபர்கள்

(36180)

---


## ரவி ராஜ் ஆடையகம் வழங்கும் மாபெரும் மலிவு விற்பனை

* அனைத்து ஜவுளி வகைகளும்,
* றெடிமேட் வகைகளும்

08-04-1995 முதல் 14-04-1995 வரை மட்டும் நடைபெறும்.
அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்

ரவி ராஜ் ஆடையகம்
77, பெரியகடைவீதி, யாழ்ப்பாணம்.
(சோதியாதெரு) (சி-971)


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ். கிளைத் தலைமையகம்

### கிளை ஆண்டுப் பொதுக் கூட்டமும், கிளைத் தேர்தலும் - 1995

மேற்படி பொதுக்கூட்டமும் கிளைத் தேர்தலும் 28-05-95 மு. ப 10-00 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறும். தேர்தல் நடைபெறும் பதவிகளாவன: தலைவர், உபதலைவர், கௌரவ செயலாளர், கௌரவ பொருளாளர், ஐந்து செயற்குழு உறுப்பினர்கள்.

யாழ் கிளையின் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் 30 பிரதிநிதிகள் மாத்திரமே இதில் பங்குபற்றி வாக்களிக்க முடியும் இவர்களின் பெயர்ப் பட்டியல் கிளையிலும், பிரிவிலும் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும்.

| | |
|---|---|
| வேட்பு மனுப்பத்திரம் விற்பனை (கிளையில்) (ஒரு மனுப்பத்திரத்தின் விலை ரூபா 50/-) | 15-05-95 — 20-05-95 (மு ப.9—பி. ப.4மணி) |
| வேட்பு மனுத்தாக்கல் (கிளையில்) | 21-05-95 (மு.ப.9—பி.ப. 4மணி) |
| வேட்பு மனு வாபஸ் [கிளையில்] | 22-05-95 [மு.ப.9—பி. ப. 4மணி] |
| தேர்தல் ஆண்டுப்-பொதுக் கூட்டத்தில் [யா. மத்திய கல்லூரி] | 28-05-95 (மு. ப. 10மணி) |

கூட்ட நிகழ்ச்சி நிரல். சென்ற கூட்ட அறிக்கை ஆண்டறிக்கை, கணக்கறிக்கை, பொதுக்கூட்டம், தேர்தல் நடைபெறும் முறைகள் ஆகிய ஒவ்வொன்றின் 10 பிரதிகள் பிரிவுக் காரியாலயங்களுக்கு உறுப்பினர் பார்வைக்காக அனுப்பி வைக்கப்படும். மேலும் விவரங்களுக்கு கிளையுடன் தொடர்பு கொள்க.

செஞ்சிலுவைச் சேவையில்,
கௌரவ செயலாளர்,

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
10-04-95 [சி/944]

---

## அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்,

### பிரதம குருக்கள், உதவிஐயர் தேவை

அம்மன் தேவாலயங்களில் கடமையாற்றிய, முன் அனுபவம் உள்ளவர்கள் பிரதம குருக்கள் பதவிக்கும், மண்டபம்/மடைப்பள்ளி வேலைகளில், அனுபவம் உள்ளவர்கள், உதவிஐயர் பதவிக்கும் எதாவரும் 15-04-95இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

- தேவஸ்தான நிர்வாக சபை.

(36086)

## வாரிவளவு நல்லியக்கச் சபை காரைநகர்

### வெள்ளி விழா ஆண்டு - 1995

முன் பள்ளி சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும், காரை மாணவர்களுக்கு பாராட்டும், பரிசளிப்பும்

காலம்: 1995-04-17
திங்கள் பி ப 2-00 மணி

இடம்: குமாரசாமி மண்டபம், யாழ். இந்துக் கல்லூரி

1995-04-16 ஞாயிறு அன்று நடைபெற விருந்த நிகழ்ச்சிகள் மேற்படி தினத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

★ அனைவரையும் இந் நிகழ்வுகளில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

10-04-95 — செயலர்.


வாழ்த்துவோர்:
திருமாட்டி புடைவைக் கடல்
(சீமாட்டி)
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
[36173]


## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 04 | 12 |
| 02 | 04 |
| 1939 | 1991 |

திருமதி
கோணேஸ்வரி துரைராசா

நான்கு ஆண்டுகள் சென்றாலும் அம்மா
உங்கள் நினைவு எம்மை விட்டு அகலாது
அன்னை பிறப்பிடமாய் வந்த
எங்கள் அம்மாவே
எங்களை விட்டுப் போக எப்படி
அம்மா மனம் வந்தது
நாங்கள் ஆறாத்துயரில் வெந்து
படிகின்றோம தாயே
நின்று வழிகாட்டாது நெடுந்தூரம்
சென்றதேனோ

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

உங்கள் நினைவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்.

மு. துரைராசா
93 சிவன்பண்ணை வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம். [36145]


## சித்திரைப் புத்தாண்டு ★ மலிவு விற்பனை ★

★ ஸ்கேட்டின் பிளவுஸ்
✶ சூட்டிங் ✶ போய் சேட்ஸ்
✶ சீத்தை ✶ பப்பிளின்
✶ பாட்டி புறக்

மற்றும் துணிவகைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள

இன்றே நாடுங்கள்:

ஓம் ரெக்ஸ்
49, சிறப்பு அங்காடி உட்புறம், யாழ்ப்பாணம்.
[சி-976]


## 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி
மீனலோசனா தேசிகநாதன்

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 09-04-1941 | 13-03-1995 |

பெற்ற தாயாகி பெருமையுடன் எமைத் தாங்கி
உற்றதுணை சேர்ந்து உலகில் எமைத் தோற்றுவித்து
நற்பண்புகள் தனை பயிலுவித்து நலமுடன் நம்
வளர்ச்சி பேணி நின்றீர் எமது இதயம் இன்று
உம் பிரிவைத்தாங்காது தவிக்கிறதே
உம் பிரிவால் விளைந்த துயர் நீர் வெந்த
தீயினால்தான் இனி தீரும்.

உமது ஆத்மா சாந்தியடைய இந் நாளில் அனைவரும் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்,
மருமகன்.

"அயோத்தியா"
பலாலி வீதி,
திருநெல்வேலி. (36182)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 காலவர் வீதி
யாழ்ப்பாணம்

## எக்காளமிடும் கேள்விகள்!

நேற்று முன்தினம் நாம் இப்பத்தியில் எழுதியிருந்தது போலவே, திங்கட்கிழமை அன்று அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற நான்காம் கட்டப் பேச்சுக்கள், முந்திய மூன்றுகளினதும் வரிசையில் வந்த நான்காவதாக அமைந்துவிட்டது!

இங்கு பேசப்பட்ட விடயங்கள் குறித்து கொழும்பில் ஜனாதிபதியுடன் ஆலோசித்து முடிவு அறிவிப்பதாகக் கூறி, வழமைபோல, ஜனாதிபதியின் செயலாளர் திரு பாலபத்தபெண்டி அன்று மாலை கொழும்பு திரும்பி இருந்தார். நேற்றுப் பிற்பகல் வரை அறிவிப்புக் கிடைக்காததால் இங்கு தங்கி நின்ற அரச தூதுக்குழு உறுப்பினர்களும் கொழும்பு சென்று விட்டனர்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதத்தில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமான போது இருந்த நம்பிக்கை, திங்கட்கிழமையோடு அருகிப் போய்விட்டது எனலாம். ஏழு மாதங்களாகப் பேசியும் தமிழர்களின் கைக்குக் கிடைத்தது எதுவும் இல்லை என்றாகிவிட்டது.

தமிழர் வாழ்க்கை நிலைமைப் பொறுத்தவரையில், மாதங்கள் பத்துக் கடந்தும் டி. பி. விஜேதுங்கா ஆட்சிக் காலத்துக்கும், சந்திரிகா ஆட்சிக் காலத்துக்கும் பெரிதாக வித்தியாசம் தெரியவில்லை. குண்டு வீச்சுத் தாக்குதலும், எறிகணைத் தாக்குதலும் மட்டும் ஓய்ந்து போயினவே அன்றி, பாவனைப் பொருள்கள் கிடைத்தல், வாழ்க்கைச் செலவு உயர்வு, வைத்திய வசதிகள், போக்குவரத்து மற்றும் அத்தியாவசியத் தேவைக்குரிய வசதிகளில் சிறிதளவான முன்னேற்றம் தானும் இல்லை.

சந்திரிகாவைப் பொறுத்த மட்டில் அவர் வாய்ச்சொல் வீரராகவே திகழ்கிறார்.

பேச்சுவார்த்தை என்றும், சமாதான முயற்சி என்றும் அழகான தோற்றம் ஒன்றை வெளியே காட்டுவதில் உள்ள அக்கறை செயற்பாடுகளாக, பெறுபேறுகளாகச் சிறிதளவேனும் வெளிவரவில்லை.

பேச்சுவார்த்தை என்று ஆறுமாதங்களாக ஆலாபரணம் பண்ணியதே அன்றி, வேலை வினைக்கெட்டதற்கு ஆக்கபூர்வமான பலன் எதுவும் தேறவில்லை!

இதற்குப் பிரதான காரணம் ஒன்று உண்டு. தமிழ் மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவைப்படும் சகல நடவடிக்கைகளையும், தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ நலன்களாகப் பார்க்கும் சந்தேகமே அந்தப் பிரதான காரணமாகும்.

சந்தேகம் என்பது பொல்லாத வியாதி. நட்புக்கும் உறவுக்கும் எதிரி. சமாதானப் பேச்சுவார்த்தை, அதன்மூலம் தமிழ் மக்களுக்கு நலன்களைச் செய்யப்போகிறோம்; உரிமைகளை வழங்கப் போகிறோம்; இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண உறுதி பூண்டுள்ளோம் என்று கூறிக் கொண்டு—

தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட சகல விடயங்களையும் விடுதலைப் புலிகளின் இராணுவ நலன்களாகப் பார்த்து அல்லது சம்பந்தப்படுத்தி அரசின் இராணுவ நலன்களை விட்டுக் கொடுக்க முடியாத நிலைப்பாட்டோடு—

சந்தேகத்துடன் நோக்கினால் பேச்சுவார்த்தை வெற்றி அளிக்காது என்று இப்பத்தியில் அடிக்கடி தெளிவாகக் கூறிவந்தோம்.

அந்தநிலை மிகவும் நெருங்கி வந்துவிட்டது என்பதனையே பேச்சுவார்த்தை சம்பந்தமாக அரசு கையாளும் வழிமுறைகளும், உத்திகளும் எடுத்துக் காட்டுகின்றன.

தமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசு அளித்த வாக்குறுதிகளை செயற்படுத்துவதற்கு விடுதலைப் புலிகள் காலக்கெடு விதித்த பின்னரும்; அரசாங்கம் தனது போக்கை மாற்றவுமில்லை; சந்தேகத்தை கைவிடவும் இல்லை; வேகத்தை கூட்டவுமில்லை.

எனவே பேச்சுவார்த்தை தொடருமா, தமிழருக்கு நலன் கிட்டுமா, தீர்வு வருமா என்ற பெரும் கேள்விக் குறிகள் நின்று சிரிக்கின்றன; எக்காளமிடுகின்றன!

# பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு எதிராக ஆசிரியர் போர்க்கொடி

### கௌரவ அடிப்படையிலான வேலைகளை நிறுத்த முடிவு

கொழும்பு, ஏப். 12

இலங்கை பல்கலைக்கழகங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கும், பல்கலைக்கழக நிர்வாகத்துக்கும் இடையில் நிலவி வரும் அபிப்பிராய பேதங்கள் மேலும் விரிவடையுமானால் பல்கலைக்கழகங்களின் செயற்பாடுகள் முற்றாக ஸ்தம்பிதம் அடையும் நிலை ஏற்படும்.

இவ்வாறு பல்கலைக்கழக ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

சம்பள உயர்வு உட்பட பல பிரச்சினைகள் குறித்து தாம் தெரிவித்த யோசனைகள் குறித்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மௌனம் சாதிப்பதாகவும் அவர்கள் குற்றம் சாட்டினர்.

பல்கலைக்கழகங்களின் கௌரவ அடிப்படையில் செய்யும் வேலைகளை எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் நிறுத்துவதென தாம் முடிவு செய்துள்ளதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளன தலைவர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

துறைத்தலைவர்கள், பீடாதிபதிகள், மாணவ ஆலோசகர்கள், மண்டப பொறுப்பாளர்கள், முதுநிலைப் பொறுப்பாளர்கள் ஆகியோர் இந்த பணியை நிறுத்தியதும் பல்கலைக்கழகங்கள் ஸ்தம்பிதம் அடையும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3-6)

## இலங்கைக்கு ஜேர்மனி ரூ220 கோடி நிதி உதவி

இலங்கைக்கு 220 கோடி ரூபாவை உதவியாக வழங்க ஜேர்மன் அரசு முன்வந்துள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் ஜேர்மன் அரசு இலங்கைக்கு வழங்கிய தொகையிலும் பார்க்க இத்தொகை இரண்டு மடங்கு அதிகம் என்றும் அரசு தெரிவித்துள்ளது.

இந் நிதியில் இருந்து பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது. [இ-3]

## நாணயத்தின் மதிப்பை குறைக்க ஆலோசனை

கொழும்பு, ஏப் 12

இலங்கை நாணயத்தின் மதிப்பை ஆகக் குறைந்தது பதினைந்து சத விதமாவது குறைக்குமாறு ஸ்ரீலங்கா ஏற்றுமதி அபிவிருத்தி சபை அரசைக் கோரியுள்ளது.

ஸ்ரீலங்காவின் செலாவணி விதத்தைக் கையாளுவதில் தற்போது தோன்றியுள்ள பிரச்சினை என்ற தலைப்பில் ஸ்ரீலங்கா ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்காக "எக் கொன்சல்ட் ஸ்ரீலங்கா" நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் சிபார்சுகளுக்கு அமைய இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மதிப்பீடு கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் மூத்த விரிவுரையாளர்களின் ஆலோசனைகளின்படி மேற்கொள்ளப்பட்டது. [இ-10]

# ரயர் போட்டு எரிக்கும் கலாசாரம் மீண்டும் ஏற்பட இடமளியோம்

### சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு, ஏப். 12

"கடந்த அரசின் காலத்தில் இருந்த மக்களை ரயர் போட்டு எரிக்கும் கலாசாரம் மீண்டும் ஏற்பட இடமளிக்க மாட்டேன்"

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க மேற்கண்டவாறு கூறினார்.

வியாங்கொடையில் நேற்று முன் தினம் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

வீட்டுக் கதவை தட்டி அழைத்துச் சென்று ரயர் போட்டு எரிக்கும் கலாசாரத்தை கடந்த அரசு மேற்கொண்டிருந்தது.

அந்த விதமான செயல்கள் இனிமேல் இடம்பெற நாம் அனுமதியோம் பயம் இல்லாத சமூகத்தைக் கட்டி எழுப்புவோம்—

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

## நரஹேன்பிட்டிப் பகுதியில் 16 தமிழ் இளைஞர் கைது

கொழும்பு நரஹேன்பிட்டியில் படையினர் மேற்கொண்ட தேடுதலின்போது 16 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவம், கடற்படை, பொலீஸ் கூட்டாக கொழும்பிலும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் மீண்டும் ஆரம்பித்துள்ள தேடுதல் வேட்டையினால் பதற்ற நிலை உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த அரசு காலத்தில் இருந்தது போன்ற நிலை மீண்டும் உருவாகியுள்ளதாகவும்—

தமிழ் மக்களின் வீடுகள், அவர்கள் தங்கியிருக்கும் விடுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்படுவதாகவும்— தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நரஹேன்பிட்டி வீடமைப்புத் திட்டம் மற்றும் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் 16 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# மட்டக்களப்பில் உணர்வுபூர்வமாக அன்னை பூபதியின் நினைவு நாள்

### கிராமங்கள் தோறும் உண்ணாவிரதம்

கொழும்பு, ஏப். 12

மட்டக்களப்பில் தியாகதீபம் அன்னை பூபதியின் நினைவுநாள் உணர்வு பூர்வமாக கொண்டாடப்பட்டு வருவதாக கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அன்னைபூபதி நினைவாக நிரந்தர சமாதானம் வேண்டி கிராமங்கள் தோறும் உண்ணாவிரதங்கள் நடைபெற்று வருகின்றன.

ஏராளமானவர்கள் இதில் பங்குபற்றுகின்றனர்.

அன்னைபூபதியின் உருவப் படங்கள் எங்கும் காணப்படுகின்றன. (இ-3)

## சிறுவர், முதியோரை வெயிலில் நடக்கவிட்டு படையினர் வேடிக்கை

### திருமலையில் சம்பவம்

திருகோணமலை, ஏப். 12

மோதல்தவிர்ப்பு உடன்பாடு அமுலில் உள்ள போதும், திருகோணமலயில் இராணுவத்தினரின் வீதிச் சோதனைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

இராணுவத்தினர் வாகனங்களில் வரும் சிறுவர், முதியோர்களை இறக்கி குறிப்பிட்ட தூரம் வெயிலில் நடக்க வைத்து வேடிக்கை பார்ப்பதாக கூறப்பட்டது.

இது குறித்து திருகோணமலை நகரசபைத் தலைவர் பொலீஸில் முறையிட்டபோதும் பலன் ஏதும் கிடைக்கவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டது. (இ-148-3)

# எம். பி. ஒருவர் கட்சி விலகினால் அவரது தொகுதிக்கு இடைத்தேர்தல்

### அரசமைப்புத் திருத்தம் குறித்து ஆராய்வு

தேர்தல் விதிமுறைகளை மறுசீரமைப்பது தொடர்பாக அரசினால் ஏற்கனவே முன்வைக்கப்பட்ட யோசனைகள் தொடர்பாக சில அரசியல் கட்சிகள் தெரிவித்த கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி எல். பீரிஸ் தெரிவித்துள்ளார் என ஞாயிறு "லங்கா தீப" பத்திரிகை தெரிவிக்கிறது.

மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுள் முக்கியமானவை:-

★ நாடாளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 235 ஆக மட்டுப்படுத்தப்படும் (முன்னர் 245 எனத் தீர்மானிக்கப்பட்டது]

★ வாக்காளர் ஒருவருக்கு இரண்டு வாக்குகள் வழங்கப்படும் இதில் ஒன்றை அவரது தேர்தற் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரைத் தெரிவு செய்யப் பயன்படுத்தலாம். மற்றைய வாக்கை அவரது மாவட்டத்தில் அல்லது மாகாணத்தில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் அரசியல் கட்சியைத் தெரிவு செய்யப் பயன்படுத்தலாம்

★ ஒரு தேர்தற் தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தான் சார்ந்த கட்சியிலிருந்து வெளியேறின் அல்லது வெளியேற்றப்படின் அந்தத் தொகுதியில் இடைத் தேர்தல் நடத்தப்படும்.

★ 150 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகுதிவாரியாகவும் 85 உறுப்பினர்கள் விகிதாசார அடிப்படையிலும் தேர்ந்தெடுக்கப்படுவர்

★ நாடெங்கும் மொத்தமாக 142 தேர்தல் தொகுதிகளை உருவாக்க எல்லை வரையறை ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படும். (இ-10]

## புதுவருட தினத்தன்று வங்கிகள் திறந்திருக்கும்

யாழ்ப்பாணம், ஏப். 12

இலங்கை வங்கியின் யாழ். பிரதேசக் கிளைகளான யாழ். உயர்தரக்கிளை, ஸ்ரான்லிவீதி 2 ஆம் கிளை, மற்றும் கன்னாகம், பருத்தித்துறை சாவகச்சேரி, நெல்லியடி, மானிப்பாய், ஊர்காவற்றுறை கிளைகள் புதுவருடக் கொடுக்கல் வாங்கல்களுக்காக எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணி முதல் 5-00 மணி வரை திறந்திருக்கும். அன்றைய தினம் சேமிப்புக் கணக்குகள், நிலையான வைப்புக் கணக்குகள், சிறுவர் சேமிப்புக் கணக்குகள், சேமிப்புச் சான்றிதழ்கள், ஆரம்பிப்பவர்களுக்கும் வைப்புச் செய்பவர்களுக்கும் கைவிசேஷம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-24)

## ஹபரண திரும்பும்

பருத்தித்துறைதுறை முகத்தில் இப்போது 'ஹபரண' கப்பலில் இருந்து மாஇறக்கப்பட்டு வருகிறது இக்கப்பல் இன்று புதன் கிழமை திரும்பிச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-173)

## படகுகள் சம்பந்தமாக பேச்சு நடத்த இலங்கைக்குழு இந்தியா செல்லும்

கொழும்பு, ஏப். 12

தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்று தாயகம் திரும்பியவர்களின் மீன்பிடிப்படகுகளை இந்தியாவிடம் இருந்து மீளப்பெற இலங்கை அதிகாரிகள் குழு ஒன்று இந்தியா செல்லவிருக்கிறது.

தமிழகத்துக்கு 90ஆம் ஆண்டு அகதிகளாகச் சென்ற அகதிகளின் மீன்பிடிப்படகுகளை தமிழக அரசு அங்கு தடுத்து வைத்துள்ளது.

இந்த அகதிகளில் பெரும்பாலானவர்கள் நாடு திரும்பியுள்ளதால் அவர்கள் தமது தொழிலை மீள ஆரம்பிக்க வசதியாக அவர்களின் படகுகளை மீளப்பெற இலங்கை அரசு முயற்சி எடுத்துள்ளது.

இது தொடர்பாக பேச்சுக்கள் நடத்த இலங்கை அதிகாரிகள் இந்தியா செல்லவிருக்கின்றனர். [இ-3]

## நாட்சென்ற பால்மா; தரம் குறைந்த அரிசி

### அரச அதிபர் முறையீடு

கொழும்பு, ஏப். 12

"காலாவதியாகிய இறக்குமதி செய்யப்பட்ட குழந்தைகளுக்கான பால்மா —

தரக்குறைவான இறக்குமதி செய்யப்பட்ட அரிசி — என்பனவே யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

இப்படிக் கூறினார் யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம்.

கொழும்பில் அண்மையில் நடந்த அத்தியாவசிய சேவைகள் இணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து உரையாற்றுகையிலேயே அரச அதிபர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளார்.

பாவனைக்குரிய வகையில் தரமுள்ள உள்ளூர் உற்பத்திகளான குழந்தைகளுக்கான பால் மா, அரிசி போன்றவற்றை அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு அரச அதிபர் அத்தியாவசிய சேவைகள் நாயகம், கூட்டுறவு மொத்த விற்பனைப் பிரிவு, நெல் சந்தைப்படுத்தும் சபை ஆகியவற்றை கோரியுள்ளார்.

## ரயர் நிறுவன கொள்ளை; இரு மாணவர்கள் கைது!

கொழும்பு ஏப். 12

கல்கிஸையில் உள்ள தனியார் ரயர் நிறுவனத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பாக இரு பாடசாலை மாணவர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆயுதங்களுடன் அந்த நிறுவனத்துக்குள் நுழைந்த ஒரு கோஷ்டி அங்கிருந்து 10 லட்சம் ரூபா பணத்தை கொள்ளையடித்ததாகவும் —

பொலீஸார் மேற்கொண்ட விசாரணையின் போது இது தொடர்பாக நுகேகொடையில் வைத்து இரு பாடசாலை மாணவர்கள் உட்பட சிலர் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ-3]

# பிறமதத்தினரும் புரியும் விதத்தில் இந்துக்கள் வாழ்ந்து காட்ட வேண்டும்

### சுவாமி விவேகானந்தர் விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஏப். 12

இயற்கையோடும் இறைவனோடும் இணைந்த, உலகின் அளப்பெரும் பொக்கிஷமான இந்து மதத்தின் சொந்தக்காரர்களான நாம், பிறமதத்தினரும் புரிந்துகொள்ளக் கூடியதாக வாழ்ந்து காட்ட வேண்டும்.

திருநெல்வேலி இராம கிருஷ்ணாலயம் நடத்திய சுவாமி விவேகானந்தர் விழாவில் பேசிய வட இலங்கை சர்வோதயத் தலைவர் திரு க திருநாவுக்கரசு இவ்வாறு கூறினார்.

இராமகிருஷ்ணாலய பணிப்பாளர் திரு ராஜா மகேந்திர சிங்கம் தலைமையில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் விழா நடைபெற்றது.

திரு. திருநாவுக்கரசுமேலும் பேசும் போது கூறியதாவது:

விவேகானந்தர் சிக்காக்கோவில் நிகழ்த்திய உரை மேற்குலகமக்களை உண்மையான வாழ்வு எது என்று சிந்திக்க வைத்தது.

இந்து தர்மத்தையும் ஆத்மீக நெறிகளையும் புரிந்து கொண்டஅவர்கள் மன அமைதியை நாடி கீழைத்தேசங்களை நோக்கி வருகிறார்கள். யோகர் சுவாமி போன்ற ஞானிகளின் தத்துவங்களைப் புரிந்து கொண்டு தமது நாடுகளில் குருபூசைகளைச் செய்கிறார்கள்.

தர்மகாண்டம், ஞானகாண்டம் என இரண்டு காண்டங்கள் இந்துமதத்தில் உள்ளதென சுவாமி விவேகானந்தர் கூறுகிறார். இதை இன்றைய தலைமுறை தெரிந்து கொள்ள வேண்டும்.

பாரதமும் ஆசிய நாடுகளும் அந்நியர்களால் அடிமைப்படுத்தப்பட்ட போது இந்த அடிமை நாட்டில் இருந்து எதையும் பெற்றுக் கொள்ள முடியாது என்றவர்களுக்கு நீங்கள் பெறவேண்டிய தத்துவம், வேதம், ஞான மார்க்கம் இங்கு உண்டு என்பதை விளக்கியவர் விவேகானந்தர்.

இப்படி அவர் கூறினார்.

திரு ராஜா மகேந்திர சிங்கம் தனது தலைமையுரையில்

கல்வி, எமது நூலறிவை சிந்தனையை ஆளுமையை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும் என்று வலியுறுத்தியவர் சுவாமி விவேகானந்தர்.

அவர் இந்திய மக்களின் படும் துயரங்களையும் வேதனைகளையும் எப்படித் தீர்க்கலாம் என்பதனைச் சிந்திக்க சிக்காக்கோ சென்றார்.

அங்கே உள்ள மக்கள் மத்தியில் பேசக் கிடைத்த வாய்ப்பின் ஊடாக இந்துமத தத்துவங்களை சிறப்புக்களை எடுத்துக்காட்டினர் என்றார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவப்பீடத் தலைவர் பேராசிரியர் ச. வை. பரமேஸ்வரனும் உரை நிகழ்த்தினார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் திருமதி சி. இராமநாதன், செல்வி சுகிர்தலிங்கம் ஆகியோரும் சுவாமி விவேகானந்தர் பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்ற மாணவர்களும் பேசினார்கள்.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் சான்றிதழ்களை பேராசிரியர் பரமேஸ்வரன் வழங்கினார்.

இராமகிருஷ்ணாலய நுண்கலைக்கோயில் மாணவிகளின் [illegible] [இ-117]

# தேசிய அடையாள அட்டைக்கு போலி பிறப்புச்சான்றிதழ்கள்

### ஆட்பதிவுத் திணைக்களம் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 12

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்போர் போலி பிறப்புச் சான்றிதழ்களை சமர்ப்பிக்க வேண்டாம் என்று ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்கள் தமது பிறப்பை உறுதி செய்யும் ஆவணங்களை கிராம சேவையாளரின் பரிந்துரையுடன் சமர்ப்பிக்க முடியும் —

போலி சான்றிதழ்களை சமர்ப்பித்து காலத்தை வீணாக்க வேண்டாம் என்றும் — ஆட்பதிவு திணைக்களம் கேட்டுள்ளது.

## ப. நோ. கூ. ச. கிளைகளில் நிறை குறைந்த பொருள்கள் விற்ற முகாமையாளர்களுக்கு அபராதம்

நிறை குறைத்து பொருள்களை விநியோகம் செய்ததாகக் கூறப்படும் கிளை முகாமையாளர்கள் இடர் கண்காணிப்புக் குழுவினரால் பிடிக்கப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டது.

இச்சம்பவம் கடந்த வாரம் பளை, இத்தாவில் கச்சார் வெளிப் பகுதிகளில் உள்ள ப. நோ. கூ. சங்கக்கிளைகளில் இடம் பெற்றன.

நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்ட போது ஒரு கிலோவுக்குப் பதிலாக 900 கிராம் உணவுப் பொருள்கள் வழங்கிய முகாமையாளருக்கு ரூபா 3 ஆயிரமும்—

20கிலோமாவில் ஒன்றரைக் கிலோ மா குறைத்து வழங்கிய கிளை முகாமையாளருக்கு, 3 ஆயிரத்து 500 ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது. [இ-117]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவபாக்கியம் திலகராயர்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் திலகராயர் நேற்று [11-04-1995] செவ்வாய்க்கிழமை காலமானார்.

இவர் வி. திலகராயர் J.P. [ஓய்வுபெற்ற நிர்வாகி Brown & Company,Colombo] அவர்களின் அன்புமனைவியும், தில்லைநாதன், சிவநாதன், திருமதி ஜெகஜோதி செல்வநாயகம், திருமதி மங்களஜோதி துரைரத்தினம் ஆகியோர் அவுஸ்திரேலியா, கைலநாதன் [முன்னாள் முகாமையாளர், ''சிக்மா பம்ஸ்'' தற்போது அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்], திருமதி ஞானஜோதி முத்துக்குமாரசாமி, கேதீசநாதன் [பிரான்ஸ்] ஆகியோரின் பிரியமுள்ள தாயாரும், ஜீனி, அனுஷியா, செல்வநாயகம், துரைரத்தினம் ஆகியோர் அவுஸ்திரேலியா; ரஞ்ஜினி, முத்துக்குமாரசாமி [இலங்கை வங்கி பிரதான கிளை, யாழ்ப்பாணம்], அனுஷியா, அஜந்தா [பிரான்ஸ்] ஆகியோரின் பாசமுள்ள மாமியாரும், ரமேஸ்குமார், டினேஸ்குமார், கண்ணன், விஷான், கிஷானி, தர்சினி ஆகியோர் அவுஸ்திரேலியா, நிரோஷன், தனுஷன், பிரவீன் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், பரமலிங்கம் (ஓய்வுபெற்ற நீதிமன்ற பதிவாளர், ஹட்டன்) அவர்களின் அருமைச் சகோதரியும், பொ. திலகம்மா அவர்களின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 51, சந்தனமாதா வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (12 4.95) பி.ப. 3 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
வி. திலகராயர்
[கணவர்]

51, சந்தனமாதா வீதி,
பாண்டியன் தாழ்வு,
சுண்டுக்குளி.
(36194)

## சின்னத்தம்பி மகாராஜா
(மகான மாஸ்ரர்)
[ஓய்வு பெற்ற கணித ஆசிரியர்]

சாவகச்சேரி-மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகக் கொண்டவரும் நுணாவில் மேற்கு கோவில் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான சின்னத்தம்பி மகாராஜா 08 04-95 இல் காலமானார்.

இவர் நல்லம்மாவின் அன்புக் கணவரும், மகாசிவம் [பொறியிலாளர், கண்டி], மகாஜெயம் [சுவீடன்], மகாசெபம் [சுவீடன்], காலஞ்சென்ற மகாசெல்வம், மற்றும் மகாநுஜம் [கனடா], திருமதி மகாரஞ்சிகம் [கனடா], திருமதி மகாபுஸ்பம் (லண்டன்] ஆகியோரின் அன்புத் தந்தையும், ஓய்வுபெற்ற சனிஷ் அதிபர் திருமதி சிவபாக்கியம் சிவலிங்கம் (அவுஸ்திரேலியா), ஓய்வுபெற்ற அதிபர் சி. வீரசக்தி, காலஞ்சென்ற டாக்டர் தங்கராசா [பண்டத்தரிப்பு], ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி நேசம் செல்லையா, ஓய்வுபெற்ற விஞ்ஞானப்பட்டதாரி டாக்டர் இன்பம் காகராஜா, ஓய்வுபெற்ற அதிபர் செல்வி தேவமணி சின்னத்தம்பி [நாவலப்பிட்டி], ஓய்வுபெற்ற அதிபர் செல்வி இராசமணி சின்னத்தம்பி [கொழும்பு], திருமதி யசிந்தா சுதாகர் [ஆசிரியை, யாழ் மத்திய கல்லூரி] ஆகியோரின் அருமைச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [12-04-95] புதன்கிழமை காலை 10 00மணிக்கு நுணாவில் காந்தாளம்பிட்டி மயானத்துக்கு எடுத்துச்செலலப்பட்டு தகனம் செய்யப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
சே. வேலாயுதம்.
[மைத்துனர்]

கோவில் வீதி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி
[36186]

## திருமதி
## அன்னம்மா மனுவேல்பிள்ளை

இளவாலையை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அன்னம்மா மனுவேல்பிள்ளை, (இளைப்பாறிய ஆசிரியை புனித சாள்ஸ் வித்தியாலயம் யாழ்ப்பாணம்) 08 - 04 - 95 இல் தெஹிவளையில் காலமானார்

இவர் காலஞ்சென்ற மனுவேல்பிள்ளையின் அன்பு மனைவியும் றொபேட் நியூட்டன், (அவுஸ்திரேலியா), ஆகியோரின் அன்புத்தாயாரும், பத்மா (ஆசிரியை) சுஜந்தா ஆகியோரின் மாமியும், யூட், நிவேதா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 12 - 04 - 95 மாலை தெஹிவளையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்;
S P இராசநாயகம்
(மருமகன்)

72, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்
(8477)

## செல்வன
## சண்முகரத்தினம் அருணன்
(சந்திரா, சரவணையூர்)

தலையாழி, கொக்குவில் நா. சண்முகரத்தினம் [லங்கா சிமெந்து லிமிட்], வேணுகா (பதில் அதிபர், மானிப்பாய் மகளிர் கல்லூரி] ஆகியோரின் அருமைப் புதல்வன் அருணன் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராமநாதர் நாகலிங்கம் – சின்னம்மா ஆகியோரினதும், வை பேரம்பலம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), பாக்கியலட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களினதும் பேரனும், தியாகராஜா (ஓய்வுபெற்ற லிகிதர்), சிவராஜா (ஜேர்மனி), வேலாயுதபிள்ளை (மருந்து விநியோக இலாகா, கொழும்பு) ஆகியோரின் பெறா மகனும், திருமதிகள் விஜயலட்சுமி சிவசாமி, திலகவதி குமாரசாமி, அன்பழகன் [U K) அறிவழகன் (அவுஸ்திரேலியா), அருளழகன் (கனடா), மதியழகன் (U. K), பணியழகன் (U K), மெய்யழகன் (கனடா) ஆகியோரின் மருமகனும், திருமதி சந்திரிகா பரந்தாமன் (கனடா), செல்விகள் டாக்டர் அம்பிகா [கனடா], சசிலேகா [கனடா] ஆகியோரின் பெறாமகனுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [12-4-95] காலை 10 மணிக்கு தலையாழி இல்லத்தில் நடைபெற்று கொக்குவில் மயானத்தில் அடக்கம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
திரு. நா. சண்முகரத்தினம்
[தந்தை]

தலையாழி,
கொக்குவில்
(36193)

# தமிழகத்திலிருந்து மீண்ட 321 அகதிகள் யாழ் வருவர்

தமிழகத்துக்கு அகதியாகச் சென்று பின்னர் திரும்பி வந்து வவுனியாவில் தங்கியுள்ளவர்களில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 91 குடும்பங்கள் (321 பேர்) எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர்.

அகதிகளுக்கான ஐ. நா தூதரக அதிகாரிகள் இவர்களை இளாலி ஊடாக அழைத்து வருவர். [உ-3]

# மோசடிகளில் ஈடுபடும் அரச சார்பற்ற நிறுவனம்

## பொறுப்பேற்க அரசு நடவடிக்கை

கொழும்பு, ஏப். 12

அதிகாரங்களை பயன்படுத்தி மோசடிகளில் ஈடுபடும் அரச சார்பற்ற நிறுவனங்களை அரசு பொறுப்பேற்கும் வகையிலான சட்ட மூலங்களை விரைவில் கொண்டுவர அரசு முடிவு செய்துள்ளது என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரச சார்பு அமைப்புக்கள் வெளிநாடுகளில் இருந்து பல கோடி ரூபா பெறுமதியான உதவிகளைப் பெறுவதாகவும்—

அந்த நிதி ஒழுங்காக பயன்படுத்தப்படாது மோசடிகள் இடம்பெறுவதாக முறைப்பாடுகள் அரசுக்கு கிடைப்பதாகவும்— அரசு கூறியுள்ளது.

இந்த மோசடிகள் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவை நிருபிக்கப்படும் பட்சத்தில் அவற்றை அரசு பொறுப்பேற்கும் வகையில் சட்டமூலங்களை கொண்டுவர அரசு முடிவு செய்துள்ளது. [இ-3]

# 'செலான்' கொள்ளையின் பின்னணியில் புது அமைப்பு

கொழும்பு, ஏப். 12

கொழும்பில் உள்ள ''செலான்'' வங்கிக் கொள்ளையின் பின்னணியில் புதிய அமைப்பு சம்பந்தப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஜனாதிபதி செயலகத்துக்கு சமீபமாக உள்ள இந்த வங்கியில் நடந்த கொள்ளையில் 65 லட்சம் ரூபா அபகரிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இக்கொள்ளை தொடர்பாக நூற்றுக்கு மேற்பட்டவர்களை விசாரணை செய்து வந்த பொலிஸார் இந்த கொள்ளையின் பின்னணியில் ''மாஸ்டர் பிரைன்'' ஆக ஒரு புதிய அமைப்பு இருந்ததை கண்டு பிடித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. [இ-3]

யாழ். பல்கலைக்கு உரிய

# எண்பது வீத பொருள்கள் திருப்பி விடப்பட்டன

யாழ் பல்கலைக்கழகத்துக்கென பிரிட்டிஷ் அரசு அன்பளிப்பாக வழங்கிய ஐந்து கோடி ரூபா பெறுமதியான உதவிப் பொருள்களில் எண்பது வீதமானவை யாழ்ப்பாண சூழ்நிலையைக் காரணங்காட்டி, பிற பல்கலைக் கழகங்களுக்கு திருப்பி விடப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் குணரட்ணம் தெரிவித்தார்.

அண்மையில் யாழ் பல்கலைக்கழக அதிகாரிகளிடம் யாழ்ப்பாணத்தில் வைத்து கையளிக்கப்பட்ட உதவிப் பொருள்கள் கூட, அசற்கு முன்னர் இவ்வாறு வேறு பல்கலைக்கழகங்களுக்கு திருப்பிவிட முயற்சி எடுக்கப்பட்டதாகவும் —

இது பற்றிய தகவல் கிடைத்ததை அடுத்து தாம் பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகராலயத்துடன் தொடர்பு கொண்டு அதனைத் தடுத்து யாழ். பல்கலைக்கழகத்துக்குக் கையளிக்கச் செய்ததாகவும் —

அவர் மேலும் தெரிவித்தார். [உ-7]

தமிழ் தம்பதியிடமிருந்து

# ரூ. 1 கோடி பெறுமதியான தங்கப்பாளங்கள் சிக்கின!

## கட்டுநாயக்காவில் சம்பவம்

கொழும்பு, ஏப் 12

சிங்கப்பூரிலிருந்து எயர் லங்கா விமானம் மூலம் கட்டுநாயக்காவில் வந்திறங்கிய தமிழ் தம்பதியர் இருவர் சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான — 17 கிலோ தங்கப்பாளங்கள் மற்றும் மூன்று கிலோ தங்க ஆபரணங்கள் — ஆகியவற்றை நேற்று நாட்டுக்குள் கடத்தி வர முயற்சிக்கையில் சுங்கத் திணைக்களத்திடம் சிக்கிக் கொண்டதாக அறிவிக்கப்படுகின்றது.

அவர்கள் வசம் 145 கைக் கடிகாரங்களும் ஐம்பது கிலோ வெள்ளியும் இருந்தன.

தமது பொதிகளை சுங்க பரிசோதனைக்கு உட்படுத்தாமல் இந்த பொருள்களைக் கடத்திச் செல்ல இவர்கள் முயன்ற சமயமே பிடிபட்டனர்.

சம்பந்தப்பட்ட பொருள்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டதுடன் மேற்படி இருவரும் சுங்கத்திணைக்களத்தினால் தடுத்து வைக்கப்பட்டனர். [உ-4]

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப் 12

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவால் மாவட்ட ரீதியாக நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நடைபெறும் ஆட்டத்தில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் மோதும்

(உ)

★ ★ ★

அரியாலையின் 76 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை ஒட்டி இன்று காலை 6 30 மணி முதல் மரதன் ஓட்டம் நடைபெறவிருக்கிறது

நாளை காலை 6 30 மணி முதல் 45வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான ஐந்து மைல் சைக்கிளோட்டம், பெண்களுக்கான 10 மைல் சைக்கிளோட்டம், ஆண்களுக்கான 15 மைல் சைக்கிளோட்டம் ஆகியன நடைபெறும்.

★ ★ ★

சுன்னாகம் அம்பாள் விளையாட்டுக் கழகத்தின் முதலாவது ஆண்டு நிறைவை ஒட்டி சுன்னாகம் ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள கழக மைதானத்தில் நடைபெற்று வரும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 2 30 மணி:- காங்கேசன்துறை ஐ. வி. க. 'ஏ' அணி எதிர் ஆவரங்கால் சர்வோதயா அணி.

★ 4. 30 மணி:- ஆவரங்கால மத்திய வி. க. அணி எதிர் காங்கேசன்துறை ஐ. வி. க. 'பி' அணி

[உ-20]

★ ★ ★

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் ''கே. எவ் எவ் எவ்'' கிண்ணத்துக்காக நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டம் இன்று பிற்பகல் 1 00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும். முதலாவது ஆட்டத்தில் ஜொலிஸ்ராஸ் வி. க. அணியை எதிர்த்து பற்றிஷியன் அணி மோதும். [உ-20]

# தபால்களை அனுப்ப நடவடிக்கை

நாளை காலை பருத்தித்துறையிலிருந்து திருகோணமலைக்கு செல்லவுள்ள ''நரோமா'' கப்பல் மூலம் கொழும்பு, மற்றும் வெளியிடங்களிற்கான தபால்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தங்கள் கடிதங்களை இன்று மாலை 4 மணிக்கு முன்னர் யாழ்ப்பாண அஞ்சல் நிலையத்திலுள்ள தபால் பெட்டியில் சேர்க்குமாறு பிரதம தபாலதிபர் திரு. சு. கோடீஸ்வரன் கேட்டுள்ளார். (உ-14)

# தெற்கு மக்களின் விருப்பம்

வடக்கு – கிழக்கில் வன்செயல்களால் சேதமாக்கப்பட்ட வீடுகளை மீள அமைக்கும் பணிகளை சிரமதானம் மூலம் மேற்கொள்ள தெற்கில் உள்ள மக்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு சிங்களப் பத்திரிகையான ''திவயின''செய்தி வெளியிட்டுள்ளது. (இ-3)

# வில்லூன்றி தீர்த்தகேணி

சித்திரா பூரணையை முன்னிட்டு வில்லூன்றி தீர்த்தக் கேணி இறைத்து துப்புரவு செய்யப்பட விருப்பதால்—

எதிர்வரும் சனிக்கிழமை வரை அந்தக் கேணியைப் பாவிப்பது நிறுத்தப்பட்டுள்ளதாக பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

எனினும் அந்தியேட்டி மடங்களில் பழமை போல் கிரியைகள் செய்வதற்கு வசதி செய்யப்படும். [அ]

## கொழும்பில்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

பேச்சு நடத்துவார்கள் என்றும்— தெரிவித்திருந்தார்.

அரசிடம் இருந்து எந்தவித பதிலும் நேற்றுக் காலை 10 மணி வரை கிடைக்காத போதும்—

அரசதரப்புக் குழுவில் யாழ்ப்பாணத்தில் தங்கி நின்ற ஆயர் கென்னத் பெர்னாண்டோ, ஜெயதேவ உயன்கொட, சாள்ஸ் அபயசேகர ஆகியோர்

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளான திரு. சு ப. தமிழ்ச்செல்வன், க. கரிகாலன், க. டொமினிக், ஆர். ரவி ஆகியோருடன் நேற்றுக் காலை 2 மணித்தியாலங்கள் பேச்சுக்கள் நடத்தினர்.

மக்களின் அன்றாடப் பிரச்சினை தொடர்பான — தமது 4 கோரிக்கைகளையும் — நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்தும் —

தமது நிலைப்பாடு குறித்தும் —

விடுதலைப்புலிகள் பிரதிநிதிகள் ஆணித்தரமாக அவர்களுக்கு விளக்கினர்.

''எப்படியாவது சமாதானத்தைக் கொண்டுவர முழு முயற்சியும் எடுப்போம்'' — என்று ஆயர் கென்னத் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் வரை கொழும்பில் இருந்து பதில் எதுவும் கிடைக்காத நிலையில் அரச தூதுக்குழுவின் மூன்று பிரதிநிதிகளும் நேற்று மாலை 3 மணிக்கு சென் ஜோன்ஸ் கல்லூரி விளையாட்டரங்கில் வந்து இறங்கிய ஹெலியில் பயணமானார்கள். (உ-3-7)

## தமிழக---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நிர்ப்பந்தமும் பொலீஸாருக்கு ஏற்பட்டது.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கும் தமிழக ஆளுநருக்கும் இடையில் பெரும் முரண்பாடுகள் ஏற்பட்டிருப்பதும்—

தமிழக முதல்வருக்கு எதிராக ஊழல் வழக்குத் தாக்கல் செய்ய சுப்பிரமணிய சுவாமிக்கு ஆளுநர் அனுமதி வழங்கியிருப்பதும் தெரிந்தவையே.

ஆளுநரின் கார் தாக்கப்பட்ட சம்பவத்தை காங்கிரஸ், தி.மு க., ம.தி.மு.க. உட்பட பலகட்சிகள் கண்டித்துள்ளன (உ-4-7)

## வடபிரதேச---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சங்கத்தினால் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி பகுதிகளில் 40 லட்சம் ரூபா சேகரிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடு ஒன்றினால் வழங்கப்பட்ட அம்புலன்ஸ் வண்டியும் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது.

— இவ்வாறு அவர் தெரிவித்தார். (உ-14)

தமிழகத்திலிருந்து திரும்பி

# யாழ். வந்த அகதிகளுக்கு மருத்துவ பரிசோதனை

யாழ்ப்பாணம், ஏப். 12

தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்று பின்னர் இலங்கை திரும்பி, வவுனியாவில் தங்க வைக்கப்பட்டு, யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்ட சகலரையும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தவேண்டும் என யாழ். மாநகர சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு போலியோத் தாக்கம் இருப்பதாக சந்தேகிக்கப்படுவதால், இவர்கள் அனைவரையும் மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் சொன்னார். (உ-7)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ்

# மட்டு. நீதி மன்றத்தில் 6 பேருக்கு எதிராக வழக்கு

மட்டக்களப்பு, ஏப். 12

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் இளம் பெண் உட்பட ஆறு பேருக்கு எதிரான வழக்குகள் எதிர்வரும் 25 ஆம் திகதி மட்டக்களப்பு மேல் நீதி மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன. இவ் வழக்குகள் தனித்தனியாக தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

முதலைக்குடாவைச் சேர்ந்த என் மகாராசா, மண்டூரைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை ஜீவமலர், அக்கரைப்பற்றைச் சேர்ந்த சி. ரமேஷ், மல்வத்தைச் சேர்ந்த த. யோகராசா, பே ரவிச்சந்திரன் ஆகியோர் மீதே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (உ-7)

# 20 தமிழரை நோர்வே திருப்பி அனுப்பியது!

வடமராட்சி, ஏப் 12

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு வெளியே, கொழும்பு போன்ற பகுதிகளில் உறவினர்கள் இருப்பவர்களையே நோர்வே இப்போது திருப்பி அனுப்புகிறது.

அந்த வகையிலரில் அடங்கும் இருபது தமிழ் அகதிகளே அண்மையில் நோர்வேயிலிருந்து இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இவ்வாறு தெரிவித்தனர் யாழ்ப்பாணம் வந்துள்ள நோர்வே பத்திரிகையாளர்கள்.

நோர்வேயைச் சேர்ந்த செய்தியாளர் ஒருவரும், பத்திரிகைப் படப்பிடிப்பாளர் ஒருவரும் நேற்று பருத்தித்துறை ஊடாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

ஏனைய ஐரோப்பிய நாடுகள் இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்பும் போது, சிறிய நாடான நோர்வேயும் திருப்பி அனுப்பவே செய்யும் —

தங்களைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை நோர்வேயில் உள்ள இலங்கை அகதிகள் விரும்பவில்லை. அதனால் அவர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கின்றார்கள். —

வடக்கு — கிழக்குக்கு வெளியே உறவினர்கள் உள்ளவர்கள் அவர்களுடன் வாழலாம் எனக் கருதியே அவர்களை முதலில் அனுப்புகிறோம். —

அகதிகள் எமது நாட்டுக்குள் நுழையும்போது அவர்களிடம் விவரக் கேள்விக் கொத்து ஒன்று வழங்கப்படுவதுண்டு அந்த கேள்விக் கொத்து நிரப்பப்பட்டதும் சம்பந்தப்பட்டவருக்கு வடக்கு—கிழக்குக்கு வெளியே உறவினர்கள் இருக்கிறார்களா என்பதனைக் கண்டறிய முடியும்.—

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுக்கள் உரிய பயனைத் தருமா என்பது சந்தேகமே. முன்னரும் இவ்வாறு பேச்சுக்கள் நடந்ததை நாமறிவோம்—என்றும் அவர்கள் துறைமுகத்தில் வைத்து செய்தியாளர்களிடம் தெரிவித்தனர். (அ-173)

# சிலாபத்தில். 3 தமிழர்கள் சுட்டுக்கொலை

சிலாபம், ஏப். 12

சிலாபம், கொக்காவில் தென்னந் தோட்டத் தொழிலாளர்கள் மூவர் கடந்த வியாழனன்று இனந்தெரியாத துப்பாக்கி நபர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆறுமுகம்(வயது 60), தம்மிகா [வயது 18], மஞ்சு [வயது 14] ஆகியோரே மேற்படி சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களாவர். (உ-7)

# சார்ஜாவில் இலங்கை வெற்றி

சார்ஜா, ஏப். 12

சார்ஜாவில் நடந்துவரும் ஆசிய கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நேற்று நடந்த ஆட்டங்களில் இலங்கை அணி பாகிஸ்தான் அணியை ஐந்து விக்கெட்டுக்களினால் தோற்கடித்து இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது

இறுதிப் போட்டியில் இலங்கையும் இந்தியாவும் நாளை மறுதினம் மோதவிருக்கின்றன. [உ-7]

# பெண் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 12

குருநகர் மாடிவீட்டுப் பகுதியில் ஐந்தாவது மாடியிலிருந்து ஓடு ஒன்று தவறுதலாக வீழ்ந்ததில் பூபாலசிங்கம் பேபி (வயது 38) என்ற இளம் பெண் தலையில் படுகாயமடைந்தார். இவர் அருகிலிருந்த தனியார் ஆஸ்பத்திரிக்கு அவசர அவசரமாக எடுத்துச் செல்லப்பட்டார். [உ)

# மரண அறிவித்தல்

## திருமதி இராசம்மா இராசா

ஏழாலை தெற்கு, சூராவத்தையைச் சேர்ந்த திருமதி இராசம்மா இராசா 9-4-95 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சு இராசாவின் அன்பு மனைவியும், இன்பகுமார் [கொழும்பு] ஜெயகுமார் [குருநகர், சந்தை பேலீர்க் கடை உரிமையாளர்] திருமதி த. இன்பவதனம் (கனடா), பிறேமகுமார் (ஜேர்மனி), திருமதி செ. தயாரதி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி இ. இரத்தினேஸ்வரி, திருமதி ஜெ கனகேஸ்வரி, தவநாயகிலிங்கம், திருமதி பி. அஜந்தி, செல்வபாஸ்கரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-4-95) பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுன்னாகம் கொத்தியால் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. இன்பகுமார்
[மகன்]

சூராவத்தை,
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்
[36195]

இப் பத்திரிகை [illegible] 12 04 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org